579/94

செந்தமிழ்ச் செல்வி.

சிலம்பு 67 பரல் 2

அக்டோபர், 1992

JL
0310 211,k27
N92-61.2
191733

# செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு-[illegible] பரல்-[illegible] அக்டோபர் 1992
திருவள்ளுவர் ஆண்டு-[illegible] புரட்டாசி



"செந்தமிழ்ச் செல்வி"
(செந்தமிழ்த் திங்கள் இதழ்)
நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை

இதழாசிரியர் குழு
முனைவர் பொன். கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் பொன். சௌரிராசன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
முனைவர் சொ. சிங்காரவேலன்
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்
ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.,

## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| வள்ளுவரும் 'ஒருபாற் கற்பும்' | ௪௬ |
| நடன சபாபதி | ௫௧ |
| பாரதிதாசனும் உருசியாவும் | ௫௭ |
| வள்ளுவர் கண்ட எண்ணும் எழுத்தும் | ௬௩ |
| வேற்றுமை - உணர்த்து முறை | ௭௨ |
| சண்முகனார் புகழ்வாழ்க | ௭௮ |



## கணிப் பொறி அகராதி

ஆசிரியர் : இராம்குமார் விலை ரூ. 50-00

இப்போது எல்லா இடங்களிலும் கணிப்பொறியில் பணிகளை எளிதில் முடித்துக்கொள்கிறார்கள். கணினி பற்றிய சொற்கள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே இருப்பதால் அனைவர்க்கும் பயன்படும் வகையில் இந்த அகராதி தொகுக்கப்பெற்றுள்ளது. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லையும் உச்சரிப்பைத் தமிழிலும் எழுதி, தமிழிலும் ஆங்கிலத்திலும் பொருளும் கொடுக்கப்பட்ட இந்த அகராதி முதன்முதல் கழகம்தான் வெளியிட்டுள்ளது என்பது கருதத்தக்கது. இதனைப் பள்ளி, கல்லூரி மாணவர்களும் கல்வி ஆர்வலர்களும் வாங்கிக் கற்றுப் பயனடைய வேண்டுகிறோம்.



# செந்தமிழ்ச் செல்வி

தி. வ. ௨௦௨௩-புரட்டாசி
அக்டோபர்—1992
சிலம்பு-௬௭, பரல்-௨


## வள்ளுவரும் 'ஒருபாற் கற்பும்'

'ஒரு பால் கோடாமை சான்றோர்க் கணி' என நடுவு நிலைமைக்கு இலக்கணம் கூறிய வள்ளுவப் பெருமான் பெண்களுக்கு மட்டுமே கற்பு நிலையினை வற்புறுத்தி ஒரு பாற் கற்புக்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டார் என்ற குற்றச்சாட்டினைக் கூறி, அதனால் ''அறிவுக்குப் பொருந்தாத ஒரு பக்கம் கற்புக் கருத்துக்களை வலியுறுத்தும் பிற்போக்கான அடிமைத்தனத்துக்குப் புகழ்பாடும் பாக்களை'' நீக்கிவிடவேண்டுமென்று புகழ்பெற்ற பெண் எழுத்தாளரான ராஜம் கிருஷ்ணன் அண்மையில் வாதிட்டுள்ளார்.

திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்கவேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள் அண்மையில் அறிவித்த அறிவிப்பினைக் கண்டு, திருக்குறளைத் தேசிய நூலாக்க வேண்டுமானால் மேற்குறிப்பிட்டவாறு 'நீக்கம்' செய்ய வேண்டுமென்பது அவர் வாதம்.

"பெண்களின் நல்வாழ்விற்குக் கற்பு தடமா? தடையா? என்ற பட்டிமன்றத்தில் கலந்துகொண்டு பெண்களுக்குக் கற்பு தேவைதான் என்று வள்ளுவர் தம் பாக்களைச் சொல்லியிருந்தாலோ, அல்லது கற்பு நெறி தேவைப்படுவது ஆண்களுக்கா? பெண்களுக்கா? என்ற தலைப்பில் பெண்களுக்கு மட்டுமே கற்பு தேவை, ஆண்களுக்குக் கற்பு நெறி தேவையில்லை என்று வள்ளுவர் மேற்கூறிய பாக்களைப் பாடியிருந்தாலோ அம்மையார் வாதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்: வள்ளுவர் எந்தப் பட்டிமன்றத்திலும் கலந்துகொண்டு திருக்குறளை இயற்றவில்லை.

அன்றும் இன்றும் நிலவிவரும் உலகியலை ஒட்டித்தான் வள்ளுவர் குறளை இயற்றினாரே தவிர உலகமெல்லாம் ஆண் தற்பை வலியுறுத்திய சூழலில் 'இல்லை இல்லை, பெண்

களுக்குத்தான் கற்பு வேண்டும்' என்று வலியுறுத்தி எழுதவில்லை.

''கற்புக் கருத்தின் வரலாற்றை ஆராயப்போனால் நில உடைமைச் சமுதாயத்தில் ஆண் வருக்கம் முதன்மைபெறுவதற்காகவும், இனத்தூய்மைக்காகவும் பெண்ணின் தாய்த்தன்மை கருதி விதிக்கப்பட்ட நெறி என்று புலப்படுகிறது?

இது 'கற்பு' பற்றி அம்மையார் தரும் விளக்கம்.

கற்புக்கும் நில உடைமைக்கும் என்ன தொடர்பு. இருபதாம் நூற்றாண்டுக் கருத்துக்களை 20 நூற்றாண்டுகட்கு முன் எழுதப்பட்ட நூலிலா ஏற்றிப் பார்ப்பது?

அவர் கூற்றிலும் ஓர் உண்மை இருக்கிறது. 'இனத்தூய்மை' கருதிக் கற்பு வலியுறுத்தப்பட்டது என்கிறார். உண்மைதான் 'சத்தியவான்' குடியேறிவந்தவன். 'சாவித்திரி' இந்த நாட்டு மகள். 'இனத்தூய்மை' பாராது அவனுடன் கலந்து விடுகிறாள். அதனால் அவள் சார்ந்த இனத்தார் யாருமே தம் பிள்ளைகளுக்குச் 'சாவித்திரி' என்ற பெயரை இன்றும் சூட்டுவதில்லை. யமனிடம் வாதாடித் தன் கணவனை மீட்டவள் ஆயிற்றே என்று கூடப் பாராது அவள் பெயரையே வெறுத்து அந்த இனத்தார் ஒதுக்கி விட்டனர். 'இது கட்டுக் கதைதான். இருப்பினும் இனத் தூய்மை'க்காக ஒரு பெயரையே ஒதுக்கிவைத்துள்ளதே ஓர் இனம். இனத் தூய்மையைக் காப்பதில் என்ன தவறு?

கற்பில் பலவகை: 'பிறர் நெஞ்சு புகாக் கற்பு' என்பது ஒரு வகை. இதைக் கற்பின் இலக்கணமாகக் கொண்டால் இன்று யாருமே கற்புடையவர்களாகக் கருதமுடியாது.

கற்பு என்பது இருபாலார்க்கும் பொதுதான். இதை மறுப்பார் யாரும் இல்லை. இன்றைய பட்டிமன்றப் பாங்கிலே சொன்னால் 'கற்பு அதிகமாக வலியுறுத்தப் பெறுவது பெண்களுக்கே' இதில் தவறு இருக்கலாம். ஆனால் இந்தக் கருத்தைக் கூறும் வள்ளுவப் பெருமானின் பாக்களை அகற்றிவிடவேண்டுமென்பது என்ன வாதம்? பிடிவாதம்.

வள்ளுவர் பெண்ணடிமைக் கருத்துக்களைப் பாடியுள்ளார் என்ற குற்றச்சாட்டிற்குச் சான்றுகள் இடையா. பெண்ணின் இயல்பான வாழ்க்கைக்கு இலக்கியம் படைக்

தமிழ்நாடு ... சென்னை
57733
5(1) C4



கிறார். 'பெய்யெனப் பெய்யும் மழை' என்ற போது அப்படிச் சொல்லி மழைபெய்யவில்லையென்றால் அவள் கற்பிழந்தவள் என்று கூறவில்லையே. ''நினைத்தேன் வந்தாய் நூறு வயது'' என்பது போல் பெய்யவேண்டுமென்று எண்ணுகிறோம். மழை பொழிகிறது. மனைவி அப்படிப்பட்ட தன்மையள் என்று மனைவியைப் புகழ்வதாகத்தானே உள்ளது.

''ஆடவரை மயக்குதல் பெண்களின் இயல்பு. எனவே பெண்கள் அருகில் இருக்கும்போது கவனம் இன்றி இருத்தல் கூடாது'' (1)

''பெண்கள் முட்டாள்களை மட்டுமல்ல, அறிவிற் சிறந்தோரையும் கூட நெறி பிறழச் செய்ய வல்லவர்கள். ஆடவரை அசைக்கும் கோபத்திற்கும் அடிமையாகச் செய்யக் கூடியவர்கள்'' (2)

''ஓர் ஆடவன் தனியிடத்தில் தன் தாய், சகோதரி, மகள் ஆகியோருடனும் கூட இருத்தல் கூடாது. ஏனெனில் கற்றறிந்தோர்க்கும் புலனடக்கம் அரியது'' (3)

இப்படியெல்லாம் வள்ளுவர் கூறியிருந்தால் அவரை என்ன செய்யலாம்? இவையல்லவா பெண்களை இழிவு படுத்தும் செய்திகள். தாயும் மகனும் தனியாக இருந்தாலே தாய் கற்பிழந்துவிடுவாள் என்று மிகக் கேவலமாக எடுத்துச் சொல்லப்படுகிறதே. இதைத் தாங்கியுள்ள நூலை என்ன செய்வது? அனலில் இடுவதா? புனலில் இடுவதா?

ஆனால் இந்த நூலை அம்மையார் மிகவும் புகழ்ந்துரைக்கிறார். கணவனும் மனைவியும் ஒத்த கருத்துடையவராக ஒருவருக்கொருவர் இழைந்து ஒருவர் மற்றவர்க்குக் கட்டுப்பட்ட நேயத்துடன் வாழ்வதே சிறப்பு என் கருத்து 'மனு'விற்குரியது. கணவனும் மனைவியும் ஒத்த கற்புடையவராய் இருக்கவேண்டுமென்று 'மனு' கூறவில்லை. இதே 'மனுதர்ம சாஸ்திரம்'தான் மேலே காட்டிய மூன்று மேற்கோள்களை (1-மனு தொகுதி 2:213 2 மனு தொ. 6;215 3 மனு: தொ. 6 - 215) யும் நமக்குத் தந்துள்ளது. (நன்றி: டாக்டர் மீனாட்சி முருக ரத்தினம்).

கற்பைப் பற்றி எழுதும்போது பெர்ட்ரண்ட் ரசல் குறிப்பிடுவார்: ஆண் எழுதும் நூல்களில் பெண்களுக்குக் கற்பு

வேண்டுமென்பார். பெண்கள் எழுதியிருந்தால் ஆண்களுக்குக் கற்பை வலியுறுத்தியிருப்பர் என்பார். "Since the moralists were men, woman appeared as the temptress; If they had been women, man would have had this role! எனவே ஆணாக இருந்ததால் வள்ளுவர் கற்பைப் பெண்களுக்கு அதிகமாக வலியுறுத்தினார் என்று சொன்னால் வாதத்திற்காக வேண்டுமாயின் ஏற்றுக்கொள்ளலாம்;

வள்ளுவர் அப்படி என்ன பெண்ணை இழிவுபடுத்தி விட்டார்? 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று போற்றத் தானே செய்கிறார். 'கற்புடையவளாயிருப்பின்' என்று ஒரு விதி போடுவது தவறு என்கிறார் போலும் அம்மையார். பெண்ணாதிக்க சமுதாயத்தைக் கண்டு, தாயே குடும்பத்தின் தலைவியென்ற வால்காவிலிருந்து வந்தேறிய மாடு மேய்ப்பர் சமுதாயச் சூழலைக் கண்டு அப்படிச் சொன்னார் போலும் வள்ளுவர்.

'தெய்வம் தொழாள் கணவன் தொழுதெழுவாள்' என்ற கூற்று பெண்ணுக்கு அடிமையெண்ணத்தைப்புகட்டுவது என்று ஏன் கொள்ள வேண்டும். ஆண்டவனைத் தொழுதால் கூடக் கற்பு பறிபோய்விடுமோ என்ற சூழல் இருந்திருக்கலாம்;

'Valluvar said that no woman shall have any friends other than her husband; and shall know no God other than her husband. The danger that Gods like Krishna can wean wives from their husbands was well understood and dreaded, it seems. We know "wires in multitudes deserted their homes to frequent the nocturnal meetings of a sect which was looked upon with the greatest suspicion". (Dr. N. Subramanian, Dr. R. Rajalakshmi—The Concordence of Tirukkural p. LXXII).

கண்ணனைப் போன்ற கடவுளர் மணமான மகளிரைக் கூடத் தம் கணவன்மாரை விட்டுவிட்டு இரவு நேரத்தில்வந்து சந்திக்கச் செய்த செய்தி எல்லோருக்கும் தெரிந்ததனால் "கடவுளைக் கூடத் தொழவேண்டாம் என்று வள்ளுவர் கூறிவிட்டார் போலும் என்பார் வரலாற்றுப் பேரறிஞர் டாக்டர் என்; சுப்பிரமணியம்;



கிரேக்கப் பண்பாட்டிலும் இந்தச் சிந்தனை நிலவி வந்ததைக் கீழ்க்கண்ட கூற்று மெய்ப்பிக்கிறது.

"A wife" said Plutarch, expressing the deepest conviction of the pagan world, should have no friends not those of her husband; and as the God's are the first of friends she should know no Gods but those whom her husband adores... No God can take plesure in sacrifices offered by a wife without the knowledge of her husband". (Dr. N. S: ibid).

விவிலியமே பெண்ணை ஆணுக்காகத்தான் படைத்ததாகக் கூறுகிறது. ஆதாமைப் படைத்த இறைவன் அவன் விலா எலும்பிலிருந்து ஒன்றை எடுத்துப் பெண்ணைப் படைத்ததாக—ஏவாளைப் படைத்தாகக் கூறுகிறதே. சில சமயம் ஆதாம் அக்கரை இல்லாமல் நடந்துகொண்டபோது தன் வாழ்வைப் பறிக்க வேறு ஒரு பெண் வந்து விட்டாளோ என்று தூங்கிக்கொண்டிருந்த ஆதாமின் விலா எலும்புகளை எண்ணிப் பார்த்ததாகக் கதை. பெண்ணுக்கு விவிலியம் கூறும் அறிவுரையே இதுதான். "உன் கணவனை மட்டும் நீ விரும்பு. அவன் உன்னை ஆட்சி செய்வான்." (Thy desire shall be to thy husband, and he shall rule over thee". —The Bible, Genesis III: 16).

இதைப் பெண்ணடிமைக் கூற்று என்பதா? வள்ளுவர் ஆணுக்குக் கற்பு வேண்டாமென்று எங்கும் சொல்லவில்லையே. அலைபாயும் உள்ளம் கொண்ட ஆணுக்கு பிறனில் விழையாமை, கூடா ஒழுக்கம், வரைவின் மகளிர் என்ற அதிகாரங்களைப் படைத்திருக்கிறாரே; "இருட்டறையில் பிணந் தழீஇயற்று" என்று கடிந்து சொல்கிறாரே ஆணின் ஒழுக்கத்தைப் பற்றி,

பெண்களுக்கு மட்டும் ஏன் கற்பு வலியுறுத்தப் பெறக் கூடாது என்பதற்கு அம்மையார் எழுப்பும் வாதம் வித்தையாக இருக்கிறது.

"பொருளாதார வருவாய்க்கான கட்டாயம், ஒவ்வொரு பெண்ணையும் பலதரப்பட்ட ஆண்களுக்கு இடையே பணி

புரியவும் பழகவும் செய்திருக்கிறது. தாம் அன்புநெறி வழுவுகிறோமோ என்ற உணர்வாகிய ஒரு பக்க நுகத்தடியைச் சுமந்து கழுத்து புண்ணாகி விடுகிறதே'' என்கிறார்.

ஆண்களுடன் பழகுவதால் பெண்கள் கற்பிழந்துவிடுவர் என்று எந்த ஆணும் கூறமாட்டான். பகைவர் புடைசூழ வாழ்ந்தபோதும் 'கற்பின் கனலி'யாக வாழ்ந்த சீதையின் வழிவந்தவர் நம் பாரதப் பெண்கள்,

கற்பு இருவருக்கும் பொதுதான். பெண்ணுக்குக் கற்பை வலியுறுத்தும் காரணத்தால் திருக்குறள் வரிகள் நீக்கப்பட வேண்டுமென்பது தேவையில்லாத வாதம்.

---

## சொல்லின் திரிபு

மொழி என்பது ஒருவர் கருத்தையோ உணர்ச்சியையோ மற்றவர்க்கு உணர்த்தப் பயன்படும் கருவியே ஆதலின், அந்தப் பயன் குன்றாத எல்லை வரையிலுமே சொற்களின் உருவம் திரியும். பொருளுணர்த்தும் பயன்குறையுமானால் சொற்களின் உருவம் திரிவதில்லை, பேசுவோர்க்கும் கேட்போர்க்கும் இடையே நிகழும் போராட்டம் என்றே கூறலாம். பேசுவோர் சொற்களை ஒலிப்பதற்கு எளியன வாகத் திரிக்க முயல்கின்றனர்; திரிபு அளவு கடந்து செல்லும் போது கேட்போர் பொருள், விளங்காமல் இடர்ப்படு கின்றனர். அந்த இடர்ப்பாடு நேராமல் சொற்களை இன்னும் சிறிது தெளிவாகவே ஒலிக்கவேண்டும் என்று பேசுவோர் முயல்கின்றனர். ஆகவே எளிமை கருதித் திரித்தல் ஒரு புறம்; தெளிவு கருதிச் சொற்களின் உருவங் களைக் காத்தல் மற்றொரு புறம்; இவ்வாறு இருவகை முயற்சிகட்கு இடையே சொற்களின் திரிபு ஓரளவில் நிற்க நேர்கின்றது. மொழிநூல் டாக்டர் மு. வ. பக். 95.

## நடன சபாபதி

பி. எல். சாமி, அ. இ. ப. (ஓய்வு)

சிற்பக்கலை அறிஞர் சிவராம மூர்த்தி அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு 'கலையினும் இலக்கியத்திலும் நடராஜர்' என்ற தலைப்பில் (Nataraja in art and Literature) ஒரு மாபெரும் ஆராய்ச்சி நூலைப் பல அரிய நிழற் படங்களுடன் வெளியிட்டார். மூதறிஞர் ஆனந்த குமாரசாமி அவர்கள் முதன் முதலில் சிவபெருமானின் நடனத்தைப் பற்றிப் புகழ் பெற்ற நூலை (Dance of Siva) எழுதினார். அதற்குப் பிறகு சிவராம மூர்த்தி எழுதியது தான் சிறந்த நூலாகும். இந்த நூலை மதிப்பீடு செய்த இந்தியாவின் தலைசிறந்த அகழ்வாராய்ச்சியாளரும் வரலாற்று அறிஞருமான சங்காலியா (H. D. Sankalia) விருப்பு வெறுப்பின்றி அறிவியல் கண்ணோட்டத்துடன் நக்கீரர் பாணியில் சில அரிய கருத்துக்களைக் கூறியுள்ளார். சிவராமமூர்த்தி பிற்காலக் கல்வெட்டுகளையும் லிங்க புராணம் முதலிய பிற்கால வடமொழி நூல்களையும் சான்றுகளாகக் கூறியுள்ளது சரியன்று என்று சுட்டிக் காட்டியுள்ளார். அதுபோலவே எல்லாவற்றிற்கும் ரிக்வேதம் முதலான உபநிடதங்களையும் சான்றாக வலிந்து கூறுவதைச் சுட்டிக்காட்டியுள்ளார். மகாபாரதத்தைத் தொன்மை சான்றாகக் கூறுவதும் மிகத் தவறு என்று கூறியுள்ளார். சங்காலியா அவர்கள் கூறிய கருத்துகளில் நடனசபாபதி என்ற கற்பனை பற்றிய கருத்துகள் கவனிக்கத் தக்கன. சபாபதி என்ற கருத்துக்கு தைத்திரேயா, வாஜாசனேயி மற்றும் கதாசம்ஹித் ஆகிய வடமொழி நூல்களிலிருந்து ஆதாரம் காட்டியது தவறு என்று கூறியுள்ளார். இந்த நூல்களில் சபையின் முன்னால் ஆட வல்லான் ஒருவன் ஆடுவது குறிப்பிடப்படவில்லை. சிதம்பரத்தில் பதஞ்சலி முனிவரும் வியாக்கிரபாதரும் சிவபெருமான் நடனத்தைக் கண்டுகளித்தனர் என்ற ஐதிகத்தை உபநிடத காலத்துக்குக் கொண்டு சென்றது பொருத்தமற்றதாகும் என்று சங்காலியா கூறியுள்ளார். ஏனென்றால் வடமொழி நூல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட

பதஞ்சலிகளும் வியாக்கிர பாதர்களும் வருகிறார்கள். மகாபாரதத்தில் சிவபெருமான் நடனங்கள் கூறப்பட்டிருந்தாலும் அது கி. பி. முதல் நூற்றாண்டிற்குப் பின்னர் எழுதப்பட்டது என்பது அண்மையில் வெளிவந்த மகாபாரத ஆராய்ச்சிப் பதிப்பிலிருந்து தெரிகின்றது என்று எழுதியுள்ளார். சபையில் நடனமாடிய கற்பனை தமிழ்நாட்டுக்குரியது; முக்கியமாக சிதம்பரத்துக்குரியது என்று கூறியுள்ளார்; இது வடநாட்டிலோ பிற இடங்களிலோ காணாதது என்றும் கூறியுள்ளார். தமிழ்நாட்டில் தான் சிவபெருமான் ஆடும் கனகசபை, இரத்தினசபை, வெள்ளி சபை, தாமிர சபை, சித்திரசபை இருப்பதை யாவரும் அறிவர். அண்மையில் புதியதாகத் தமிழ்நாட்டில் சைவத் தோற்ற வரலாற்றை ஆராய்ந்த ஐ. கே. சர்மா என்ற அறிஞர் தமிழ்நாட்டில் பாசுபதம் கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் புகுந்தது என்று கருதியுள்ளார். ஆதலில் சிதம்பரத்தில் சைவக்கரு சங்க காலத்திலேயே இருந்திருக்க வேண்டும்.

பல்லவர் காலத்தில் பாசுபதத் துறவிகள் சிதம்பரத்தில் குடியேறி யாகம் செய்து வந்தனர். அவர்களை 'பசுவேட்டு எரி ஓம்பும் சிறப்பர்' என்று ஞானசம்பந்தர் சுட்டிக்காட்டியுள்ளார். சிவநெறிக்குச் சிறப்புத் தலங்களாக இருந்த காஞ்சி, காளத்தி, திருவண்ணாமலை, திருவானைக்காவல், சிதம்பரம் முதலிய ஊர்களில் பாசுபதர் இருந்தனர்.

சங்க காலத்தில் கடவுளுக்குக் கோயில்கள் இருந்தன என்பதைச் சங்க நூல்களிலிருந்து அறியலாம்.

'மரையேறு சொரிந்த மாத்தாட் கந்தின்
சுரையிவர் பொதியி லங்குடிச் சீறூர்
நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகைப்
புரிசை மூழ்கிய பொரியரை யாலத்து' —அகம் 287

'புற்றுடைக் கவர புதலிவர் பொதியிற்
கடவுள் போகிய கருந்தாழ் கந்தத்
துடனுறை பழைமையிற் துறத்தல் செல்லாது'
—அகம் 307

'கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி
மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
வம்பலர் சேர்க்கும் கந்துடைப் பொதியிற்'
—பட்டினப்பாலை 247-24



'மணிப்புறாத் துறந்த மரஞ்சேர் மாடத்
தெழுதணி கடவுள் போகலிற் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை' —அகம் 167

பொதியில் கந்தில் கடவுள் உறைவதாகக் கருதினர்; செங்கல்லால் கட்டப்பட்ட பொதியிலில் தாம் பலி செய்தனர். பொதியில் தரையைப் பகடு சாணத்தால் மெழுகினர். அகநானூற்றுப் பாடல் (167) 'ஒழுகுபலி' என்று அன்றாடம் செய்யும் பலியைக் குறித்துக் கூறியுள்ளது. பிற்காலத்தில் ஸ்ரீரங்கம் கோயிலில் அன்றாடம் நடக்கும் பூசைகள், சடங்குகள் பற்றிக் கூறும் நூல் கோயிலொழுகு என்றழைக்கப்பட்டது. ஒழுகு என்ற சொல் வரலாறு என்ற பொருளில் வழங்கியது. பிற்கால பாளையக்காரர்கள், குறுநில மன்னர்கள் வரலாற்றைக் குறித்து வழங்கியதைக் காணலாம். அகநானூற்றுப் பாடல் (167) மரத்தால் செய்யப்பட்ட மாடத்தில் 'எழுதணி கடவுள்' தொழப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. ஆறாம் நூற்றாண்டுக்குரிய முதலாம் மகேந்திரனின் திருமய்யம், குடுமியான்மலை குகைக் கோயில்களில் சுவரில் எழுதிய கடவுள் ஓவியம் தொழப்பட்டதற்குச் சான்று தெரிவதாக நீலகண்ட சாஸ்திரியார் கூறியுள்ளார். இதிலிருந்து எழுதணி கடவுளைத் தொழும் வழக்கம் பல்லவர் துவக்க காலத்தில் இருந்தது தெரிகின்றது. பண்டைக் காலத்தில் முதன் முதல் தோன்றிய சிதம்பரம் கோயில் பொதியிலாகவே இருந்திருக்க வேண்டும் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அகநானூறு 86 ஆம் பாடலில் பொது என்ற சொல் திருமணம் நடக்கும் இடத்தைக் குறித்து வழங்கியுள்ளது. இதற்கு உரையெழுதிய பிற்கால ஆசிரியர் பொது என்றழைத்தது எல்லோரும் தடையின்றிச் செல்லுமிடம் என்றதனால் என்று கூறியுள்ளார். இது சார்பாகப் பழமொழி நானூறு (56) பாடல் 'அம்பலம் தாழக்கூட்டுவார்' என்று கூறுவதைக் கவனிக்க வேண்டும். அம்பலம் எல்லோரும் செல்ல உரிமையுள்ள இடமாதலால் அம்பலத்தை மூடிப் பூட்டுவார் இல்லை என்று கூறியுள்ளது சிதம்பரத்தில் துவக்க காலத்தில் தோன்றிய கோயிலைப் 'பொது' என்று அழைத்தனர் என்று தெரிகின்றது. இப்பெயர் பொதியில் என்பதன் மரூஉ ஆகும். மாணிக்கவாசகர் திருவாசகத்தில் 'பொது' என்றே சிதம்பரம் கோயிலை அழைக்கின்றனர். இப்போதும் சிதம்பரம் கோயில் தீக்ஷிதர்கள் 'பொது தீக்ஷிதர்கள்' என்றழைக்கப்படுவதைக் காணலாம். சிதம்பரம்

தில்லையம்பலம் என்றழைக்கப்படுவதைக் காணலாம். தில்லை மரங்கள் நிறைந்த காட்டில் அம்பலத்தில் காளியோடு நடனம் புரிந்து வென்ற தில்லைக் காளியை ஊர் எல்லைக்குச் சிவபெருமான் அனுப்பியதாக ஐதீகக் கதை வழங்குகின்றது. இன்றும் தில்லைக் காளி கோயில் சிதம்பரம் நகர் எல்லையில் உள்ளது. சிவன் காலைத் தூக்கி ஆடிய ஊர்த்துவ தாண்டவத்தைக் காளி ஆட முடியாததால் தோற்றதாகக் கூறுவர். தில்லை மரத்தை அம்பல விருட்சம் என்று நிகண்டுகள் கூறும். தில்லையம்பலத்தில் காளியே முதலில் நடனம் ஆடினாள் என்று கருதவேண்டும். திருவெண்காட்டில் சிவன் நடனம் ஆடிக் காளியைத் தோற்கடித்ததாகக் கூறும் கதையும் உண்டு. இங்கு காளிக்கு ஒரு சிறு கோயில் உண்டு. இதை ஆதிசிதம்பரம் என்று கருதுவதுண்டு,

பழந்தமிழ் மரபில் இசையிலும், நடனத்திலும் பொதுவாகக் கலைகளில் பொதுவியல், வேத்தியல் என்று இரண்டு துறைகள் இருந்தன என்பது சிலப்பதிகாரத்திலிருந்து தெரிகின்றது. வடமொழியில் இப்பாகுபாட்டில் வேத்தியலை மார்க்கம் என்றும் பொதுவியலை தேசி என்றும் அழைத்தனர். சிலப்பதிகாரப் பதிகத்துள் சீத்தலைச் சாத்தனார்.

'மூவேந்தர் நாட்டிலும் நிகழ்ந்த கதையாகலான்
ஏனை இருவேந்த ரியல்பும் வேத்தியலும்
பொதுவியலும் எல்லாம் உணர்ந்த நீரே
அருளவேண்டும்'

என்று இளங்கோவடிகளைச் சிலப்பதிகாரம் இயற்றக்கேட்டுக் கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. அடியார்க்கு நல்லார் வேத்தியலை அரசர்க்கு ஆடுங்கூத்து என்றும் பொதுவியலை எல்லார்க்கும் ஒப்ப ஆடுங்கூத்து என்றும் கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். சிலப்பதிகாரத்தில் கடலாடு காதையில் கூறப்பட்டுள்ள எல்லா ஆடல்களும் பொதுவியல் கூத்தாக இருந்து பின்னர் இறைவன், இறைவியர் ஆடிய கூத்தாக மாற்றப்பட்டதன் காரணமாக வேத்தியல் கூத்தானமை தெரிய வருகின்றது. பாரதி ஆடிய கொடு கொட்டி என்ற ஆடல் கைகொட்டி ஆடுங்கூத்தென்று அடியார்க்கு நல்லார் கூறுவதால் அது இன்றும் கேரளத்தில் ஆடப்படும் கைகொட்டிக் களி என்ற நாட்டு நடனத்தின் மாற்றமே என்பது தெரியவரும். மற்றும் பாண்டரங்கமும் ஆண்டிக் கூத்தாகும். அல்லியமென்பது வடநூல்களில் ஹல்லீசகா



என்ற தேசிக் கூத்தாகக் கூறப்படுகின்றது. கண்ணன் ஆடிய மல்லாடலும் ஹல்லிசா ஆட்டைச் சேர்ந்ததாகும். குடைக் கூத்தும் பொதுவியல் கூத்தாகும். குடக்கூத்தும் தற்போதைய கரகாட்டம் போன்றதொரு கூத்தாகும். பேடிக்கூத்தும் இன்றும் கேரளாவில் ஆடப்படுகின்ற பொதுவியல் கூத்தாகும். மரக்காலாடல் கீழ்த்திசை நாடுகளில் இன்றும் மரக்காலைக் காலில் பிடித்து ஆடும் கூத்தாகும். கொல்லிப்பாவை என்பது இன்றும் மோகினி ஆட்டமென்று கேரளாவில் ஆடப்படும் ஆட்டத்தின் முதியநிலைக் கூத்தாகும், கொல்லிப் பாவை சங்க நூல்களிலேயே கூறப்படும் பெண்தெய்வமாகும். அதனை மோகினியுடன் சேர்த்தது பிற்கால விளைவாகும். கடையம் என்று கடைசியர் கூத்தாக அழைக்கப்படும் கூத்து: அயிராணி என்ற இந்திராணி ஆடிய கூத்தாகக் கூறப்பட்டாலும் அது வயலுள் ஆடிய கூத்தாகக் கூறப்படுவதால் அது கடைசியர் அதாவது உழத்தியர் ஆடிய கூத்தாகும். இவ்வாறு பொதுவியல் கூத்துகள் தெய்வங்களோடு சேர்த்த போது வேத்தியல் கூத்தாயின.

சிதம்பரத்தில் சங்க காலத்தில் அல்லது அதற்கு முன்னர் தில்லைமரக்காடு இருந்திருக்க வேண்டும். இன்றும் சிதம்பரத்துக்கு அருகில் பிச்சாவரத்தில் தில்லைமரக்காடு உள்ளது. தில்லை மரக்காடுகளில் இருந்த இறைவி பொதியில் தொழப்பட்டிருந்தாள். அன்னையை விலக்கிச் சிவபெருமான் அதே பொதியிலில் குடி கொண்டார். அதற்குக் கூறப்பட்ட கதையே தில்லைக் காளியைச் சிவபெருமான் ஊர்த்துவ தாண்டவக்கில் ஆடி வெற்றி கண்டதாகக் கூறிய கதையாகும். தில்லைக் காளியை எல்லைக்கப்பால் ஓட்டிய கதையாகும். தில்லை மரத்தை அம்பலவிருட்சம் என்று நிகண்டுகள் கூறுவது தில்லை மரத்தடியில் இருந்த இறைவியின் பொதியில் என்ற கோவிலாகும். அக் கோயில் சிவனுக்குரியதாக மாறியதும் தில்லையம்பலம் எனப்பட்டது. சங்க காலத்துப் பொதியில் இக்காலத்து கேரள ஸ்ரீகோயில் போன்ற அம்பலங்களாகவே இருந்தன. சங்க காலத்தில் சிதம்பரத்தில் இருந்த பொதியிலே (பொதுவில்) சிவபெருமான் கோயிலானது. பின் அங்கு பூஜை செய்ய வடநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட தில்லை மூவாயிர அந்தணர்கள் பொது தீட்சிதர் என்றழைக்கப்பட்டனர். சங்ககாலப் பொதுவில் பின்னர் மன்னனின் இல் போல அமைக்கப்பட்டதால் கோவில், கோயில் ஆனது. ஆனால் சிதம்பரத்தில் இருந்த சிவபெருமானுடைய முந்தைய பொதுவில், பொதியில்

பெயர் மறக்கப்படாது மாணிக்கவாசகர் காலத்தும், பின்னரும் 'பொது' என்று வழங்கியது. சிற்றம்பலத்தில் கூத்தாடுவதாகவே அப்பர் கூறுகின்றார். மன்றில் ஆடுவதாகவும் பாடியுள்ளார். ஆனால் ஆரூர் முதலிய சில ஊர்களில் சிவன் ஆடுவதாக அப்பர் கூறியுள்ளாரென்றும் அங்கு எந்தவிடத்திலும் அம்பலத்தே ஆடியதாகக் கூறவில்லை. 'தில்லை நகர்ப் பொதுவுற்றாடிய சீர் நடனமும்' என்று சுந்தரர் திருக்கானப்பேர் பதிகத்தில் பாடியுள்ளார். சுந்தரர் தில்லையில் பொதுவில் சிவன் ஆடுவதாகக் கூறியுள்ளார். வெள்ளியம்பலம் முதலிய ஐந்து அம்பலங்களில், ஐந்து சபைகளில் சிவன் ஆடியதாகக் கூறியது பிற்கால வளர்ச்சியாகும். ஆதலின் மூவர் தேவாரக் காலத்துத் தில்லையே சிவபெருமான் ஆடும் அம்பலம் ஆகக் கருதப்பட்டது. சிதம்பரம் என்ற பெயரே மூவர் தேவாரத்தில் வழங்கவில்லை. ஆதலின் சிற்றம்பலம் என்ற பெயரை சித் + அம்பரம் = சிதம்பரம் என்ற பெயரிலிருந்து வந்ததாகக் கூறுவது தவறு. பிற்காலத்தில் தத்துவார்த்தங்கள் எழுந்தபோது அவ்வாறு கூறியது தவறாம். பின்னர் சித்சபை என்று மொழி பெயர்க்கப்பட்டது. இந்தத் தவறைச் சில ஆண்டுகளுக்கு முன் சிற்பநூல் அறிஞர் கோபிநாதராவ் கூறியுள்ளார். சிற்றம்பலமே சிற்சபை, சிதம்பரம் என்று மாற்றப்பட்டது என்கிறார். பொதுவென்ற பெயர் மிகப் பிற்காலத்திலும் மறக்கப்படவில்லை. 'ஆதியாம் பரையலது நன்னர்ச் சிற்பொது நடன மாருங்காணார்' என்று குற்றால சித்திரசபையை சிதம்பரத்துச் சிற்சபையுடன் ஒப்பிட்டுக் குற்றாலச் சித்திரசபை புராணம் கூறியுள்ளது. சிற்பொது என்ற பெயர் சிற்றம்பலம் என்பது தெரிகின்றது. சிதம்பரம் பொது என்றும் சிற்பொது என்றும் வழங்கப்பட்டது தெளிவாகிறது. 'உடையார் நடநவில் கனகப்பொது' என்று திருநாவுக்கரசர் புராணம் சிதம்பரத்தைக் குறிப்பிட்டுள்ளது. 'ஆடகப்பொது' என்று சேக்கிழாரும் குறிப்பிட்டுள்ளார். 'நடிப்பனாம் பொதுவோர் சித்திரப் பொதுவா நடநவில் காட்சியார்' என்று திருக்குற்றாலப்புராணம் சித்திரப் பொது என்று சிற்பொதுவோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளது கவனிக்கத்தக்கதாகும். ஆதலின் சிதம்பரத்துக்கு ஆதியில் இருந்த பொது என்ற பெயரே சபை என்று வடமொழியில் அழைக்கப்பட்டது என்பது தெளிவாகும். அகநானூற்றில் எல்லோரும் செல்லும், பார்க்கும் கலியாண இடம் பொதுவென்று அழைக்கப்பட்டது. இல் மனிதன் குடும்பமாக



வாழும் இடமாகும். பொதுஇல் எல்லோரும் கண்டு தொழும் கடவுள் உறையும் இடமாகும்.

சிவன் நடமாடும் பொதியிலும் இல் போல் (பொது இல்) எல்லோரும் காணும் பொதுவிடமாக இருந்ததால் பொதுவென்றும் அம்பலமென்றும் அழைக்கப்பட்டது. கேரளத்தில் இன்றும் இறைவன், இறைவி திருக்கோயில்களை அம்பலம் என்றும் அழைக்கும் வழக்குள்ளது. இது சார்பாக ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பா மாலையில் கூறிய தொன்றும் கருதத்தக்கது. நடுகல் நாட்டி வழிபடுவதைப் பொதுவியல் படலம் என்றழைத்தார். நடுகல் வழிபடுவது சங்க காலத்திலும் அதற்குப் பின்னரும் பொது மக்கள் வழிபாடு ஆகும். அதற்குத் தொல்காப்பியரும் இலக்கணம் வகுத்துள்ளார். சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கு எழுப்பிய கோவில் நடுகல் வழிபாட்டின் வளர்ச்சியே என்பது தெளிவாகும். கண்ணகியைத் தாழ்ந்த மக்களான குன்றக் குறவரும் பிறரும் பொதுவாகத் தொழ வேண்டுமென்பதற்காகவே செங்குட்டுவன் கண்ணகிக் கோட்டம் அமைத்தான். இறந்தவரைக் கோயிலில் வழிபடுவது வேதவழக்கோடு சார்ந்தது அன்று. பிற்காலத்தில் சோழர் இறந்த அரசனுக்குப் பள்ளிப் படைக் கோயில் அமைத்தது வழக்கத்திற்கு மாறுபாடானதாகும். பொதுவியலைப் பின்பற்றியது. அப்பர் ஆலக் கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், ஞாழல் கோயில் ஆகிய கோயில்களைக் குறிப்பிட்டுள்ளார். அகநானூறு 287 ஆம் பாடல் ஆலமரத்தின் கீழே கட்டப்பட்ட பொதியிலைக் கூறியுள்ளது. மக்கள் கூடும் மரத்தடியில் மன்றத்தில் பொதியில் கட்டுவது சங்ககால வழக்காகும். அதுவே அப்பர் காலத்தில் சிவனுக்குரிய கோயில்களாக ஆலம், ஞாழல், கொகுடி முதலிய மரஞ்செடிக்கடியில் கட்டப்பட்ட கோயில்களைக் குறித்தது. தில்லை மரத்தடியில் இருந்த இறைவியின் பொதியில் சிவனது கோயிலானபோது அது பொதுவில், பொது என்றே அழைக்கப்பட்டது. அப்பர் தேவாரத்தில் உமைபாட ஆடும் சிவனும் உமையோடாடும் சிவனும், காளி காண ஆடும் சிவனும், காளி கோபந்தணிய ஆடும் சிவனும், பூதம் பேய்க்கணத்தோடாடும் சிவனும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். ஆனால் வியாக்கிரபாதரும் பதஞ்சலியும் பார்த்ததோ பூசித்ததோ அப்பர் கூறவில்லை, இதிலிருந்து சிவராமமூர்த்தி வடமொழி உபநிடத்தங்களோடு வேதங்களோடு சிதம்பர நடனத்தை இணைத்துக் கூறியது பொருத்தமற்ற வலிந்த கூற்றாகும் என்பது விளங்குகின்றது;

எதற்கெடுத்தாலும் வடமொழி மூலங்காட்டும் போலிப் புலமையையே இது காட்டுகின்றது.

சிவனுடைய நடனத்தைப் பற்றி மிகப் பெரிய நூல் எழுதிய சிவராமமூர்த்தி சிதம்பரத்தின் தில்லை வனச் செழிப்பைப் பற்றியும் பெருமை பற்றியும் கூறிய வடமொழிப் புராணங்களை எடுத்துக் கூறினாரே ஒழிய தில்லையம்பலம் என்ற பெயர் வந்த வழியையோ, பொதுவென்ற தனிப்பட்ட பெயர் வழக்கையோ கவனித்ததாகத் தெரியவில்லை. வடமொழி நூல்களில் சிவன், காளி, சப்த மாதர்கள், கணபதி ஆடும் ஆட்டங்களையெல்லாம் எடுத்துக் கூறும் இவர் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட இறைவன், இறைவி நடனங் களைப் பற்றி யாதொன்றும் கூறவில்லை, அவருக்குப் போதிய தமிழிலக்கிய அறிவு இன்மையையே இது காட்டு கின்றது.

அறிஞர் சங்காலியா சபாநாயகர் பற்றி ஒரு கருத்து கூறியுள்ளார். முதலில் சிவன் ஆடுதற்குத் தோன்றிய கோயில்களெல்லாம் சிறிய அறையாகியதால் சிவன் நடனத்தைப் பிறர் காணும்படி அது சபையாக இருந்திருக்க முடியாது என்று கூறியுள்ளார். இது உண்மையே. மகாபலிபுரத்தில் சிவன் ஆடுவதாக உள்ள சிற்பம் உள்ள இடம் சிறு அறையே. ஆதலின் அது சபையாக இருந்திருக்க முடியாது. ஆனால் பல்லவர்க்கு காலத்து முன்னர் இருந்த மரத்தடியன்றப் பொதியில்கள் எல்லோரும் பார்க்கும்படிச் சபையாக இருந்தவையாகும். அவ்வாறு சிவபெருமானுக்குக் கோயில் அமைந்தமையால் அது சபை என்றும் ஆடும் சிவன் சபாநாயகர் என்றும் அழைக்கப்பட்டார். சிதம்பரத்தில் முதலில் சிவன் ஆடிய சபை சிறியதாக இருந்ததால் சிற்றம்பலம், சிற்சபையென்றும், சிற்பொது என்றும் அழைக்கப்பட்டது. பின்னர் அது விரிவாக்கப்பட்ட போது பேரம்பலம் எனப்பட்டது. உத்தரகோசமங்கை என்ற ஊர்ச் சிவன் கோயில் பற்றிக் கூறும் ஐதிகம் இது சார்பாகக் கவனிக்கத்தக்கது. இங்கு ஆதிசிதம்பரம் என்ற தனிக் கோயில் இருந்தது. இக் கோயிலில் மட்டுமே, அறையில் ஆடி பதஞ்சலிக்கும் வியாக்கிரபாதருக்கும் காரைக்கால் அம்மையாருக்கும் காட்சி கொடுத்த இடமாதலால் இந்த அறை 'ஆதி சிதம்பரம்' என்று பெயர் பெற்றதாகவும் பின்னர் இறைவன் இங்கிருந்து சிதம்பரத்துக்குச் சென்று அனைவரும் காண ஆடியதால் அம்பலம் என்றும் பெயர்



பெற்றதாகவும் கூறுவர். அறையில் ஆடி அம்பலத்தில் ஆட வேண்டும் என்ற பழமொழி இது காரணமாகத் தோன்றியதென்று கூறுவர். இதுகாறும் கூறியதிலிருந்து சிதம்பரத்துக்குச் சிற்றம்பலம், அம்பலம் என்ற பெயர் வந்தவாறும் பொது என்ற பெயர் இருந்தவாறும், சபாநாயகர் என்ற கற்பனைக் கருத்துத் தோன்றியவாறும் நன்கு விளங்கும்.

நடராஜன் என்ற சிறப்புக் கருத்து பற்றி உலகுக்கு முதன் முதலில் எடுத்துக் கூறி உலக அறிஞர்களை வியக்க வைத்தவர் தமிழ் ஈழம் ஈன்ற தவப்புதல்வர் ஆனந்தா குமாரசாமி ஆவார். அவர் தமிழில் உள்ள குமரகுருபரர் எழுதிய சிதம்பர மும்மணிக்கோவை, சிவஞான சித்தியார், திருவருட்பயன், உண்மை விளக்கம் ஆகிய நூல்களை நடராஜ தத்துவத்தை விளக்கப் பயன்படுத்தியுள்ளார். கோயில் புராணத்தில் விளக்கப்பட்டுள்ள சிவனின் நாதாந்த நடனத்தைப் பற்றி எழுதியுள்ளார். சிவன் ஆடிய தாண்டவ நடனம் என்ற கற்பனை ஆரியருக்கு முற்பட்டது என்று ஆனந்த குமாரசாமி கூறியுள்ளார். இக் கருத்தைச் சிவராமமூர்த்தி எடுத்துக் கூறவில்லை. ஆனந்தா குமாரசாமி திருமூலர் திருமந்திரத்திலிருந்து திருக்கூத்து தரிசனம் என்ற பகுதியிலிருந்து பாடல்களை எடுத்துக் காட்டியுள்ளார். திருமூலர் சிவன் ஆடிய அரங்கைப் பற்றியும் கூறியுள்ளார். திருமூலர் சிவபெருமானின் ஐந்து வகை நடனங்களைக் கூறியுள்ளார். அவைகளில் பொதியில் கூத்து பற்றிக் கூறும் போது எல்லோரும் பார்க்கும்படித் தில்லையில் நாதாந்தக் கூத்து ஆடினதாகக் கூறியுள்ளார். சிவராமமூர்த்தி சிவ பெருமான் ஆடிய கூத்துகளை பரதருடைய நாட்டிய சாத்திரத்தில் கூறப்பட்ட கரணங்களைக் காட்டிக் கூறி யுள்ளாரே ஒழிய திருமூலர் கூறிய சிவன் ஆடிய நடனங் களைப் பற்றியோ கலித்தொகை கடவுள் வாழ்த்துப் பாடல் கூறும் நடனத்தைப் பற்றியோ கூறவேயில்லை. தாண்டவம் என்ற சொல் ஒருவகை ஆடலைக் குறிக்கும். தண்டு என்ற முனிவர் ஆடியதால் தாண்டவம் எனப்பட்டது என்று வடநூலார் கூறுவர். ஆனால் தாண்டு என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து தாண்டவம் என்ற சிவன் ஆடிய நடனப் பெயர் வந்ததாகும். இதனை வடமொழியில் எடுத்துக் கொண்டு கற்பனையாகக் காரணப்பொருள் கூறினர்.

மொகாஞ்சதாரோ, அரப்பா நாகரிகச் சிறப்புகளில் நடனமாடும் மங்கையின் உலோக சிற்பம் மிகவும் சிறப்பான

தாகும். நடனமாடக் காட்டும் இடுப்பின் வாட்டம் நுண்ணிய வேலைப்பாட்டைக் காட்டுகின்றது. நடனமாடும் பெண்ணின் முகத்தின் சாயை இந்தியப் பழங்குடி மக்களையே காட்டுகின்றது. சங்காலியா அவர்கள் கூறுவது போல் அரப்பா நாகரீகம் திராவிடருடையது என்ற உறுதியாக்கப் பட்டால் தமிழர் கண்ட எழில்மிகு நடராஜ செப்புத்திருமேனி ஐயாயிரம் நூற்றாண்டுப் பரம்பரையுடையது என்பது விளங்கும். இதே கருத்தை என்றிக் சிம்மர் (Henrick Zimmer) என்ற சிறந்த இந்தியக் கலை அறிஞரும் தெரிவித்துள்ளார். ஆனால் சிவராமமூர்த்தி அரப்பாவின் ஆடும நங்கையைக் குறிப்பிடாதது வியப்பாயுள்ளது என்று சங்காலியா அவர்கள் கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

———

## சொல்லும் பொருளும்

மங்கலம் அல்லாதவற்றைக் கூறும்போது, மங்கலமான வேறு சொற்களால் மறைத்துக் கூறல்; அதனால், அச்சொற்களின் பொருள் வேறுபடுதல்.

'அஞ்சினார்,' 'மறைந்தார்' என்ற சொற்கள் இவ்வாறே 'செத்தார்' என்ற பொருள் உணர்த்துவன ஆயின, இவை மங்கல வழக்கு.

நாகரிகமல்லாத சொகற்ளை மறைத்து அவற்றின் பொருளை நாகரிகமான பிற சொற்களால் புலப்படுத்தல் அதனால், அச்சொற்களின் பொருள் வேறுபடுதல்.

'வாய் பூசல்' 'கால் கழுவல்' முதலாயின இவ்வாறு வழங்குவன;

இவை இடக்கரடக்கல் என்ற பகுதியில் அடங்கும்.

மொழிநூல் மு; வ. பக். 253-254

## பாரதிதாசனும் உருசியாவும்

டாக்டர் மா. அண்ணாதுரை,
எம்.ஏ. எம்.எல்.ஐ.எசு., பி.எட்., பிஎச்.டி.

(முன்னிதழ், ௨௪ஆம் பக்கத் தொடர்ச்சி)

### ஏவுகணைகள் ஏழ்மையைப் போக்குமா?

உருசியா-வல்லரசு நாடுகளில் ஒன்றாக-அணு ஆயுதங்களில் வல்லமையைப் பெற்ற நாடாக-உருவாக்கப்படுகிறது. எழில் நிலவு நோக்கி ஏவுகணைகள் செலுத்தப் பெற்றன. இருப்பினும் விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்கத் தவறியது. எனவே, உருசியாவில் ஏழ்மை நிலவியது. ரொட்டித் துண்டிற்கு இன்று ஒவ்வொரு உருசியக் குடிமகனும் கையேந்தும் நிலையுள்ளது. ஏவுகணைகளும் ஆயுதங்களும் மக்களின் பசிப் பிணியைப் போக்காது. இதனை உணர்ந்த பாவேந்தர், அந்நாளிலேயே ஏவுகணைகளால் மக்களுக்குப் பயனில்லை என்றார்; ஏழ்மை நீங்காது என்றார்.

"உருசிய நுண்ணுணர் வுடையவர் இந்நாள்
எழில்நிலவு நோக்கி ஏவு கணைகள்
ஏவுகின்றதால் என்னைப் போன்ற
ஏழைகட்கு என்ன கிடைக்கக் கூடும்?
என்றான். உருசியில் ஏழைகள் இல்லை
என்று கூறும் இழிந்த அறிஞர்
இதனை எண்ணி அடங்கவேண்டும்".

என்று உருசியத் தொழிலாளி பொதுவுடைமைத் தாளில் புகன்றதை எடுத்துக்காட்டி, பின்வருமாறு மேலும் கூறுகிறார் பாவேந்தர்:

"வீட்டு வசதியை ஏவுகணை கூட்டுமா?
உருசிய நாட்டில் உள்ள மக்கள்
மச்சு வீட்டுக்கு வௌவால் அடிப்பதை
எச்சில் இலைகள் அறிய வேண்டும்".

இவை மட்டுமன்று, உருசிய அதிபர் குருசேவ் விளம்பர நாடகம் ஆடுவதாகப் பாவேந்தர் குறிப்பிடுகின்றார்;

''இந்த நாட்டில் இன்றியமையாப்
பொருள்கள் எல்லாம் போதிய அளவில்
இல்லா நாளில் குருசேவ் விளம்பர
நாடகம் ஆடுவது நல்லது தானா?
கேடுசெய் யாதா என்று கேட்டான்
ரஷ்யத் தலைவர் சிஷ்யர் உணர்க.''

மேலும், 'செயற்கைக் குட்டி நிலாவும் இயற்கை வட்ட நிலாவும்' எனும் கவிதையில் வானவெளி ஆராய்ச்சியில் ஆயிரங்கோடி செலவு செய்வதால், மக்களின் வயிறு நிறைவு அடைவதில்லை என்றும், ஏவுகணை ஒன்றை உருவாக்கு வதற்குச் செலவிடும் பெருந்தொகையைக் கொண்டு ஏழை மக்களுக்கு உதவலாம் என்றும் பாவேந்தர் கூறுகின்றார்:

வட்டநிலா : இருப்பு மிகவும் இருக்கும் ஊரில்
அரிசி உண்டோ குட்டி நிலாவே

குட்டிநிலா : ஆயிரங் கோடிச் செலவில் வந்தேன்
அறிவைக் கொடுப்பாய் வட்ட நிலாவே.

வட்டநிலா : ஆயிரம் கோடியை அரிசிக் காக
அளித்த துண்டா குட்டி நிலாவே
போய்விடு போய்விடு குட்டி நிலாவே
போய்விடு என்றது வட்ட நிலாவே
தீயில் எரிந்தது குட்டி நிலாவே!
தீய்ந்து விழுந்தது குட்டி நிலாவே!

''ஏவுகணை ஒன்றை இயற்று தற்குச்
செலவிடும் பெருந்தொகை இருந்தால்
உலவும் ஏழை மக்களுக் குதவுமே''

### மனித நேயமின்மையை எடுத்துக்காட்டல்

இவ்வுலகில் மனிதர்கள் அனைவரும் உறவினர்களே. போரின்றி வாழ்தலே சாலச் சிறந்தது. உருசியப் புரட்சிக்குப்பின் வல்லரசு ஆக மாறிய உருசியாவும், அமெரிக்காவும் மக்கள் நலத்திற்கு மாறாக-மனித நேயமின்றி உலகில் போர் மேகங்களை உருவாக்குவதைப் பாவேந்தர் கண்டிக்கிறார்; மேலும், உலகப் போர்முட்டலின் உயிர்



விடுதல் நன்று என்றும், அமெரிக்க அதிபர் ஜசனும், உருசிய அதிபர் குருசேவ்வும் சண்டையிட்டு வெற்றி பெறுதலே மக்கட்குத் தொல்லை இல்லாத வழி என்றும் வழி காட்டுகிறார்:

''எத்தனை ஆயிரம் கோடி இழக்கின்றார்
ஒத்துலக மக்கள்எலாம் உங்களால்-பித்தர்களே
வீம்புண்டு சண்டை விளைக்கின்றீர்; வீட்டில் முழத்
தாம்புண்டு சாதலே நன்று''.

''ஜசன் அவனும் குருசேவும் போர்க்களத்தில்
கைசலிக்கச் சண்டையிட்டுக் காட்டட்டும்-மெய்யாய்
அவர்வென்றால் வென்ற தவர்நாடாம் அன்றி
இவர்வென்றால் வென்றதிவர் நாடு''

### குடும்ப ஒழிப்பு முறையை எதிர்த்தல்

பொதுவுடைமைக் கொள்கையில்-கம்யூனிசச் சித்தாந் தத்தில் குடும்ப ஒழிப்பு முறை வலியுறுத்தப்படுகிறது. பாவேந்தர் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. உருசியாவில் ஒருவன்-ஒருத்தி எனும் பண்பாடு இல்லை எனில் உருசியச் சமுதாயம் அழியும் என்று கருதும் பாவேந்தர், 'பெண்கள் காமம் கழிக்கும் கலையமா?' என்ற கவிதையைக் குயில் இருமை இதழில் வெளியிட்டு, உருசியாவில் குடும்பப் பண்பு அழிவதைத் தடுக்க முயல்கின்றார்:

''பெண்கள் பற்றி நீபேசும்
பேச்செல்லாம் முடை வீசும்
எண்ணங் கெட்ட உருசியனே!
ஏதுங் கெட்ட உருசியனே!
காமம் கழிக்கும் கலையம் என்றாய்
காதற்பெண்கள் நிலை மறைந்தாய்!''

தாய்மை என்னும் பண்பு கொன்றாய்
தலை கொழுத்தே கெடுகின்றாய்
..........................................
..........................................
மண வாழ்க்கை வேண்டாம் என்றாய்
மாட்டு வாழ்க்கை வேண்டும் என்றாய்

கணந்தோறும் இருட்டறைக்குக்
கட்டுச் சோறு கட்டுகின்றாய்''

''உருசிய நாட்டில் உள்ளபெண்கட்குத்
திருமணம் தேவை இல்லை என்று
கூறி அவர்களைக் குச்சுக் காரிகள்
ஆக்க ஆடவர் அலையும் கொடுமையை
ஆதரிக்கும் அழுகிய தோல்கள்
ஈது கண்டு திருத்தம் எய்துக!''

### உருசியச் சீர்குலைவில் கொர்பச்சேவின் பங்கு

ஸ்டாலின், குருசேவ் போன்ற தலைவர்களைக் காட்டிலும், கொர்பச்சேவ் உருசிய சீர்குலைவு ஏற்பட மிகவும் காரணமாக விளங்கியவர் என்று கூறலாம். இவர் கம்யூனிசக் கொள்கையின்பால் காட்டிய ஈடுபாடு இன்மையும் இடர் என்று உருசிய நாட்டில் இவர் புகுத்திய 'பெரஸ்த் ரோய்க்கா' எனும் பொருளாதார மறுசீரமைப்புச் கொள்கையும், 'கிளாஸ்நோய்த்' எனும் மதச் சுதந்திரம் உள்ளடக்கிய தனி மனிதச் சுதந்திர உணர்வும் உருசிய நாடு பிளவுபட, சிதறுண்டுபோக வழிவகுத்தன. மேலும்,

''தன்னுடைய பெற்றோர்கள் கடவுளை வழிபடக்கூடிய அன்றைய ஸ்டாலின் ஆட்சி மற்றும் கம்யூனிச அரசு சுதந்திரம் அளிக்கவில்லை என்பதைக் கண்டு வந்த கொர்பச்சேவ், தான் அதிபராக வந்தவுடன் மதச் சுதந்திரத்திற்கு முதலில் அடித்தளம் நாட்டியதுதான்.''

என்ற குறிப்புகள் மூலம், கோர்பச்சேவ் மதஉணர்வு உடையவர் என்பது புலப்படுகிறது. இது கம்யூனிசக் கொள்கைக்கு மாறானதாகும். 'மதம் ஓர் அபின் போன்றது' என்றார் கார்ல் மார்க்சு.

''மதம் என்ற கருங்கற் பாறையில்
மல்லிகை பூப்ப தில்லை;
மதியினில் மயக்கம் என்ற
நஞ்சொன்றே மலரும்...''

என்றார் பாவேந்தர். 'கிளாஸ்நோய்த்' என்ற பெயரில் மத உரிமை வழங்கியதே உருசியச் சீர்குலைவிற்கு அடிப்படைக் காரணமாகும். மேலும், கொர்பச்சேவின் மறுசீரமைப்புக் கொள்கையால் இன்று உருசியாவில் தனி மனிதனுக்குச் சொத்துரிமை வழங்கப் பெற்றுள்ளது. ஆணைப் பொருளாதாரத்திலிருந்து — கூட்டுப் பொருளாதாரத்திலிருந்து — சந்தைப் பொருளாதாரத்திற்கு மாற்றம் பெற்றுள்ளது: இவை மட்டுமன்றி உருசியாவில் கம்யூனிசம் தோற்று விட்டது என்பதை அனுபவம் மூலம் தீர்க்கமாகக் கூற முடியும் என்றார் கொர்பச்சேவ். ஆனால், இந்திய மார்க்சிஸ்டு தலைவர் திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு,



''சர்ச்சில், இட்லர், ட்ருமன் முதல் ரீகன் வரை சோவியத் ஒன்றியத்தை உடைக்கவேண்டுமென்றும் எத்தனையோ பேர் முயற்சி செய்தனர். அவர்களால் முடியாததை, இயலாததைக் கொர்பச்சேவ் சாதித்து விட்டார்''

என்று குறிப்பிடுகின்றார். இந்தக் கருத்தினை வலியுறுத்துவது போல்,

''சோவியத் யூனியனின் தற்போதைய பொருளாதார
நெருக்கடிகளுக்குக் காரணம் கொர்பச்சேவ்தான்'

என்று தற்போதைய உருசிய குடியரசின் தலைவர் 'போரிஸ் யெல்த்சின்' குறிப்பிடுவது சிந்தனைக்குரியதாகும். எனவே, உருசிய நாடு சிதறுண்டு போவதற்குக் கொர்பச்சேவின் பங்களிப்பு அதிகம் என்று அறிய முடிகிறது

### திருவள்ளுவர் கூறுல் பொதுவுடைமைச் சிந்தனைகள்

மார்க்ஸ், லெனின் ஆகியோர் கூறிய பொதுவுடைமைச் சிந்தனைகளே உலகுக்கு ஏற்புடையது என்று பாவேந்தர்,

''இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று''.

''இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்''

போன்ற குறட்பாக்களின் மூலம் 'குயில்' இதழ்களில் எடுத்துக் காட்டியுள்ளார்.

அறியாமையை உலகில் இல்லாமல் செய்துவிடுவேன் என்று ஒருவன் சொல்வதே பிழை என்று கருதும் பாவேந்தர். உருசிய நாட்டிலிருந்து அறியாமை, இரவல்,

ஏழ்மை, குறைபாடு போன்றவை முற்றிலும் அகற்றப்பட்டது என்று பொதுவுடைமைக்காரர்கள் கூறும் கருத்தினை மறுக்கின்றார்:

"பொதுவுடைமைக்காரர்கள் செல்வநிலையில் மக்கள் நிகர் என்ற நிலையை உண்டாக்கி விடுவோம் என்று அவிழ்க்கும் பொய் மூட்டைகளை முழுதும் நம்பிவிட வேண்டும் என்று எண்ணிவிடக் கூடாது. ஏழ்மையின் வேரை அழித்துவிடுவோம் என்று சொல்வோர் வாய்ப் பந்தல் போடுவோரே!"

மேலும், 'கேட்டலும் கிளத்தலும்' என்னும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

கேட்டல்: உலகில் உள்ள அறியாமையாகிய வேரையும், இரவல், ஏழ்மை, குறைபாடு என்ற அதன் மரத்தையும், என் உருசிய நாட்டினின்று நீக்கி விட்டேன். மற்ற நாட்டினின்றும் நீக்கிவிடவும் முயல்கின்றேன் என்று உருசியன் சொல்வதில் உண்மை இல்லை?"

கிளத்தல்: அப்படிச் சொல்லும் உருசியன் கரடிவிடுகிறான் என்று நான் முன்னமே சொல்லியிருக்கிறேன்.

முடிவுரை:

காரல் மார்க்சு, லெனின் உருவாக்கிய சோசலிச-கம்யூனிசக் கொள்கையில் ஆழ்ந்த பற்றுக்கொண்ட பாவேந்தர், அந்தக் கொள்கையில் ஸ்டாலின், குருசேவ் போன்ற உருசியத் தலைவர்களால் ஏற்பட்ட தவறுகளைக் கண்டிக்கத் தவறியது இல்லை. கம்யூனிசக் கொள்கையை நடைமுறைப்படுத்திய கம்யூனிசத் தலைவர்கள் செய்த தவறுகளே-குழப்பங்களே-நேர்மையற்ற செயல்களே உருசிய நாடு இன்று சிதறுண்டு போவதற்குரிய காரணங்களாகும். திருவள்ளுவர் கூறும் அப்பழுக்கு அற்ற பொதுவுடைமைக் கருத்துக்களே உலகுக்குச் சிறந்தன. உருசிய நாட்டைப் பற்றி உருசியத் தலைவர்களைப் பற்றி-கம்யூனிசத்தைப் பற்றி-பாவேந்தர் வழங்கிய கருத்துக்களும் சிந்தனைகளும் இதனை மெய்ப்பிக்கின்றன; உறுதி செய்கின்றன.

---

031-211,422
N92-67-2

# வள்ளுவர் கண்ட எண்ணும் எழுத்தும்

க. கணேசலிங்கம் B.SC. (Eng.); C. Eng;
M. I. E. E. (Lond.); M. I. E. (Cey.)

(முன் இதழ் உக ஆம் பக்கத் தொடர்ச்சி)

வணிகத் தொடர்பால் யவனர்கள் தமிழகத்தில் பூம்புகாரில் தங்கியிருந்தனர் என்ற செய்தி சிலப்பதிகாரத்தில் வருகிறது. 'பயனறவு அறியா யவனர் இருக்கை' என்பதால் அவர்களின் குடியிருப்பு (Colony) ஒன்று இருந்ததை அறியலாம். தமிழகத்துத் துறைமுகங்களில் வந்து தங்கிய மரக் கலங்கள் பற்றிய வர்ணனைகளையும் பழைய நூல்களில் பார்க்கலாம். தமிழகத்தில் நடந்த பொருட்களின் இறக்கு மதியிலும் ஏற்றுமதியிலும் மேற்கு நாடுகளும் கிழக்கு நாடுகளும் பங்கேற்றன. ஆகையால் வெளியுலகத் தொடர்பும் அதன் தாக்கமும் வள்ளுவர் காலத்திலும் அதன் முன்னும் பின்னும் தமிழகத்தைப் பாதித்தனவென்று துணிந்து கூறலாம். அவைகள் தமிழர்தம் கலாச்சாரத்தை நேரடியாகத் தாக்காது விடினும் அறிவியல் வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் துணை புரிந்திருக்கக் கூடும். பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரத்தின் கருத்து இங்கே பொருத்தமானதாகும்.

'......The contact with the west through trade, and the contact with Eastern Islands through trade and colonisation, were all responsible for stimulating a new growth in Tamil land which is found in Cangam literature, which represents a new historical development and new trend in civilization and culture......The stimulus given by a foreign contact does not necessarily end in mere imitation. Aping of any other nation cannot amount to an original contribution to the development of culture an civilization. There will be some amount of imitation, often at the surface level, which is more or less prejudicial to that society itself. One may refer to the popularity of he Greek Wines in the Cankam age. But this is not the

191733
சென்னை-600 003

kind of lasting influence we are referring to. The foreign influence worth mentioning however, acts in a different way. It is not only adopted but adopted to the native genious of the country which feels the influence''

—Dr. T. P. Meenakshi Sundaram, 'Philosophy of Tiruvalluvar', Madurai University, 1969.

கணிதம் போற்றும் பண்டைய கிரேக்கரின் தொடர்பும் தமிழ்ச் சமுதாயத்தில் கணிதத்திற்கு முக்கிய இடம் கிடைக்கத் துணை புரிந்தது என நம்பலாம்.

**தமிழர் பங்களிப்பு :**

தமிழ்ச் சமுதாயம் நாகரிக வளர்ச்சி யடைந்திருந்த காலத்தில் வந்தவைதாம் திருக்குறளும் அதன் முன் வந்த தொல்காப்பியமும் பிற நூல்களும். இல்லையாயின் இத்தகைய பெருநூல்கள் வர வாய்ப்பில்லை. வள்ளுவர் காலத்திற்கு முன்பே கணிதவியல் தமிழ் மக்களிடை மேன்மையடைந்திருந்த தென்பதற்குச் சான்றுகள் உள. ஏரம்பம் என்னும் கணிதநூல் பற்றிப் பரிமேலழகர் குறிப்பிடுகிறார். அரண் அமைக்கும் அறிவியல் - கணித முறைகள் பற்றிய நூல்கள் இருந்தனவென்பதற்குப் பின்வரும் குறள் எடுத்துக்காட்டு:

'உயர்வகல் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்'' (குறள் 75-8)

கட்டிடக்கலை, தச்சுக்கலை முதலிய துறைகளில் சிறந்து விளங்கிய ஒரு சமுதாயத்தில் கணிதவியல் மேல்நிலை யடைந்திருப்பது இயல்பே. ஆகையால் பண்டமாற்றத்துடன், அறிவியல் பரிமாற்றமும், பிறநாடுகளுடன், குறிப்பாகக் கிரேக்கத்துடன், நடந்திருக்குமென்பதில் ஐயமில்லை. வணிகத் தொடர்பால் கிரேக்கரின் கணித அறிவியல் தாக்கம் தமிழகத்தில் பாதிப்பை உண்டுபண்ணியதுபோல், தமிழரின் கணித அறிவியற் கலைகள் கிரேக்கரிடமும் பரவியிருக்கக் கூடுமென்று கருதலாம். பின்னைய கருத்து முன்னையதைவிட ஏற்றுக்கொள்ளக் கூடியதென்பதற்குச் சான்றுகள் பலவுண்டு.

வணிகத் தொடர்பினால் அன்றைய தமிழகத்திலிருந்து பல தமிழ்ச் சொற்கள் கிரேக்க நாட்டிலும் பிற நாடுகளிலும்



ஊடுருவி இருக்கின்றன. இங்கே டாக்டர் அ. மா. பரிமணம் அவர்களின் கருத்து குறிப்பிடத்தக்கது.

'குரங்கையும், மயில்களையும் குறிக்கும் எபிரேய மொழிச் சொற்கள் கபிம், தூகிம் என்பனவாகும். இவற்றின் தமிழ்ப் பெயர்கள் கவி, தோகை என்பன. ஹிம் என்னும் எபிரேயச் சொல், இங்கிருந்த தந்தத்தினைக் குறிக்கும் இபம் என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபேயாகும். இந் நாட்டிலிருந்து கிரேக்க நாடுகளுக்குச் சென்ற பொருள்களின் தமிழ்ப் பெயர்களாகிய அரிசி, இஞ்சி, கறுவா, திப்பிலி என்பன முறையே ஓரிசா, இஞ்சி வேர், காபி ஓன், பில்லி எனத் திரிந்து அம் மொழியில் வழங்குகின்றன'. (டாக்டர் அ. மா. பரிமணம், 'இயற்கை நாட்டியம்', பாரி நிலையம், சென்னை, 1982).

இங்ஙனம் பல எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். நாகரீக வளர்ச்சியடைந்த பெருநாடுகளுடன் வணிகத் தொடர்பு கொள்வதற்கேற்ற ஆற்றலும், அறிவும், பண்பாடும், பொருள் வளமும், அன்றே தமிழகத்திற்கு இருந்திருக்கின்றன. தமிழ்ச் சொற்கள் சென்றதுபோல் தமிழரின் அறிவியற்கலையும் கிரேக்க அறிவியற் சிந்தனையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். பிற நாடுகளின் கணிதவியல் வளர்ச்சிக்கு இந்திய நாட்டுப் பங்களிப்பு கணிசமானது; அது தொன்மையானது என்பது அறிஞர் கருத்து. பண்டைய இந்தியக் கலாச்சாரமும் அறிவியல் வளர்ச்சியும், நாகரிக வளர்ச்சியில் மேன்மையடைந்திருந்த திராவிட அறிவியல், கலாச்சாரத்தைப் பெரிதும் உள்ளடக்கினவென்பது வரலாற்று உண்மை. இந்த வகையில் தமிழகம் பண்டைய நாளில் கணிதவியலுக்கும் சிறந்த பங்களிப்பு செய்திருக்குமென்பதும், சிறந்த இடம் அளித்திருக்குமென்பதும் மறுக்க முடியாததாகும்.

**காலம் கடந்த கருத்து**

கணிதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்த வள்ளுவர் எண்ணும், எழுத்தும் உயிருக்குக் கண் என்று கூறாமல், வாழும் உயிர்க்குக் கண் என்றது நோக்கற்பாலது. வாழும் உயிர் என்ற சொற்றொடர் காலம் இடம் கடந்த நிலையில் வைத்து வள்ளுவரால் ஆளப்பட்டது; வளரும் சமுதாயத்தைக் குறிப்பது. சமுதாய வளர்ச்சி வள்ளுவர் காலத்தில் ஒரு படி, பரிமேலழகர் காலத்தில் இன்னொருபடி, இன்றைய

காலத்தில் வேறொரு படியாகக் காலப்போக்கில் மாற்றமடைகிறது. இடத்துக்கு இடம் மாறுபட்டும் இருக்கிறது.

அன்றைய சமுதாயத்திற்கு வேண்டிய எண்ணும் எழுத்தும் இன்றைய சமுதாயத்துக்குப் போதுமானதாக இருப்பதில்லை. தேவையற்றதாகக் கூட இருக்கலாம். எக்காலத்தும் எவ்விடத்தும் வளரும் சமுதாயத்தைக் குறிக்கவே வள்ளுவர் 'வாழும் உயிர்' என்று பொதுமை நோக்கில் கூறினரெனலாம்.

'என்ப' என்ற சொல்லின் பொருளும் இங்கே கருதற்பாலது. எண்ணுக்கும், எழுத்துக்கும் பல பொருட்கள் இருந்தாலும், அவை காலத்துக்காலம் வேறுபட்ட பொருட்களைக் கொடுத்தாலும், வள்ளுவர் காலத்தில் இச் சொற்களுக்குப் பொதுவாக வழங்கப்பட்ட பொருட்களைக் குறிக்கவே எண்ணென்ப எழுத்தென்ப என்று கூறினார் என்று பலர் விளக்குவதுண்டு. காலத்தைக் கடந்து நிற்கும் வள்ளுவரின் குறளை அவரின் காலத்துக்குள் அடக்க முனைவது குறளைச் சிறுமைப்படுத்துவதாகும். 'வாழும் உயிர்' என்ற சொற்றொடரால் எப்படி நேற்றைய, இன்றைய, நாளைய சமுதாயத்தைக் குறிப்பிட்டாரோ. அதேபோல் 'என்ப' என்னும் சொல்லின் மூலமும் எண்ணுக்கும், எழுத்துக்கும் காலத்துக்கேற்ற கருத்தைக் குறித்துள்ளார் என்பதே பொருந்தும். அப்படியாயின் இன்றைய விஞ்ஞான உலகிலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இக்குறள் இருக்கிறதா என்பதை ஆராய்வது அவசியமாகிறது.

### விஞ்ஞான ஆய்வில் எண்

விஞ்ஞானத்தின் முக்கிய நோக்கம் இயற்கையின் தத்துவத்தை அறிவதும், காரணம் காட்டமுடியாத இயற்கை நிகழ்வுகளை அறிவியல் அடிப்படையில் விளக்குவதுமாகும். விஞ்ஞானத்தின் ஒரு துறையான பௌதிகவியல் (Physics) இதில் முக்கிய இடம் வகிக்கிறது. விஞ்ஞான ஆய்வும் பரிசோதனையும் இயற்கையின் புதிர்களை விடுவிக்கத் துணைபுரிகின்றன. பௌதிக ஆராய்ச்சி முறையைப் பொதுவாக மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் கட்டம் ஆராயும் பொருள் அல்லது அசாதாரண நிகழ்வு (Phenomenon) பற்றிய ஆய்வுக்குத் தேவையான சாட்சியங்கள் (evidence), தரவுகளைச் சேகரித்தல். இரண்டாவது கட்டம் ஆய்வு செய்து. ஆய்வு முடிவுகளைக் கணிதக் குறியீடுகளுடன் ஒன்றுபடுத்தி, கணிதவியல் அடிப்படையில் தொகுத்து ஒழுங்குப்படுத்துவது. இத்தகைய கணிதவியல்



திட்டமுறை (Scheme) கணிதத் தேற்றம் அல்லது கணிதவியல் மாதிரி (Mathematical theorum or Mathematical model) எனப்படும். இந்தக் கணிதக் கோட்பாட்டின் அடிப்படையில சம்பந்தப்பட்ட, வேறு ஆய்வுகளின் முடிபை முன்கூட்டியே ஊகிப்பதும் அவற்றைச் சரிபிழை பார்ப்பதும் பொதுவாக நடைபெறும். இந்த நிலையில் ஆய்வின் முடிவுகளைவிளக்கவும் மேற்கொள்ளும் பிற ஆய்வுகளை முன்கூட்டிய கூறவும் (Predict) ஒரு கணிதவியல் திட்டத்தைக் கண்டு பிடித்ததும் விஞ்ஞானியின் முக்கிய கடமை முடிந்துவிடுகிறது. இங்கே விஞ்ஞான உண்மைகளை வெளியிட எழுத்துக்கள் பயன்படுவதில்லை. அவை தம் ஆற்றலை இழந்துவிடுகின்றன. எண்ணொன்றே கண்ணாக நின்று கை கொடுக்கிறது.

விஞ்ஞான ஆராய்ச்சியின் மூன்றாவது கட்டத்தில் விஞ்ஞானி தன் ஆய்வு முடிவுகளை வெளியுலகிற்குக் கூற வேண்டிய தேவையேற்படுகிறது. இங்கேதான் எழுத்துக்கள் பயன்படுகின்றன. 'எழுத்து' இல்லையானால் விஞ்ஞானம் வெளியுலகிலிருந்து தனிமைப் படுத்தப்பட்டுவிடும். ஆயினும் விஞ்ஞான உண்மைகளை வெளிப்படுத்தும் கணிதத்துக்கு உள்ள ஆற்றல் எழுத்துக்கு முழுவதும் இல்லையென்றே கூற வேண்டும். இங்கே எழுத்து எண்ணுக்குப் பின்னால் நிற்க வேண்டிய நிலைமை தவிர்க்க முடியாததாகிறது. இதையுணர்த்தும் வள்ளுவர் குறளும் ஒரு விஞ்ஞான வடிவமே.

### எண் என்னும் எழுத்து

'எண் என்ப' என்று தொடங்கிய வள்ளுவர் 'ஏனை எழுத்தென்ப' என்று தொடர்கிறார். ஏனை என்ற சொல் 'மற்றைய', 'பிற' என்ற பொருள்களில் வரும். இதுவே பரிமேலழகர் முதல் பின்வந்த பலரும் கொள்ளும் கருத்து. எண்ணும் மற்றைய அல்லது பிற எழுத்தும் என்னும்போது, எண், எழுத்து ஆகிய இரண்டும் ஒரு இனத்தைச் சேர்ந்தவை என்றாகிறது- எண் என்னும் எழுத்தும் மற்றைய எழுத்தும் என்று பொருள் கொள்ளலாம்.

ஒரு எண்ணை நாம் கருதும்போது அந்த எண் நம் எண்ணத்தில் அருவமாக முதலில் தோற்றமெடுக்கிறது. பின்னர் அதற்குரிய வடிவத்தை நாம் கற்பனை செய்கிறோம். இன்று எண்களைக் குறிக்க நாம் பயன்படுத்தும் வரிவடிவம் (1, 2, 3 முதலியன) அரேபியரின் வரிவடிவங்களே. அண்மைக் காலம் வரை தமிழ் வரிவடிவங்களே (௧. ௨. ௩ முதலியன) எம்மனோரால் பயன்படுத்தப்பட்டன. மனத்திலே அருவப்

பொருளாக எண் உருவாகி எழுத்துருவமாக வடிவெடுக்கிறது. எழுத்து இப்படியல்ல. எண் உயிரென்றால் எண்ணை வெளிப்படுத்தும் எழுத்து உயிர்தாங்கிய உடலெனலாம். நாவுக்கரசரின் 'எண்ணானாய்' 'எண்ணுக்கோர் எழுத்து மானாய்' என்ற வாக்கியம் இங்கே பொருத்தமாக அமைகிறது.

**எண்ணத்தின் வெளிப்பாடு**

'அ' என்ற எழுத்து உயிர் எழுத்துக்களில் முதலெழுத்தாக நின்றாலும் எண் வரிசையில் எட்டைக் குறிக்கிறது 'உ' என்ற எழுத்து இரண்டையும், 'ய' என்ற எழுத்து பத்தையும் குறிக்கின்றன. எண் மூலமும் எழுத்து மூலமும் பொருளை அறிவிப்பது தமிழர்கண்ட சித்தாந்த வழக்காக அமைந்துள்ளதை நூல்கள் மூலம் அறியலாம். 'எட்டும் இரண்டும் ஆனான்' என்பதில் எட்டும் இரண்டும் பத்தென்பதும், 'பத்தைக் குறிக்கும் எழுத்தாகிய யகரம் சித்தாந்த வழக்கில் உயிரைக் குறிப்பதால் 'உயிராக ஆனான்' என்று பொருள் கொள்ளலாம். 'எட்டு இரண்டு அறியாதேனை' என்ற தொடரில் எட்டாகிய 'அ' சிவனைக் குறிப்பது. இரண்டாகிய 'உ' அருளைக் குறிப்பது. அவனையும் அவன் அருளையும் அறியாதேனை என்ற கருத்து எண்கள் மூலம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. எண்ணமே எண்ணாக வெளிப்பட்டு, அந்த எண் எழுத்தாக வெளிப்பட்டுப் பொருளை உணர்த்துகிறது. உண்மையில் இரண்டு வகை எழுத்துக்களும் எண்ணத்தின் வெளிப்பாடே. எண் என்ற பதத்துக்கு ஒரு பொருள் எண்ணம். ஆகையால் எண்ணமும் அதன் வெளிப்பாடும் என்ற பொருளில் எண்ணும் எழுத்தும் வழங்கப்பட்டதெனலாம். எண்ணென்றால் கணிதமெனக் கொண்டாலும் கணிதத்தின் தோற்றமும் அதன் செயல்பாடும் எண்ணத்தையே களமாக் கொண்டவையாகும்.

**கணிதத்தின் சரிவு**

கிரேக்கரின் கணிதவியல் அவர்களின் தத்துவக் கொள்கைகளிலெல்லாம் பிரதிபலித்ததை முன்பு கண்டோம். அவர்களின் கேந்திர கணிதக் கோட்பாடுகள் மேற்கத்திய தத்துவ ஞானத்திலும் விஞ்ஞானத்திலும் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணி வந்தன. யூகிளிட்டின் கேந்திர கணித (Euclidian Geometry) அடிப்படையில் அமைந்ததே வெளியின் உண்மை இயல்பு (reality of space) என்று இரண்டாயிரம்



ஆண்டுகளாக நம்பப்பட்டு வந்தது. அவரின் கணிதவியல் கொள்கைகள் இந்த நூற்றாண்டின் முற்பகுதிவரை மேற்கத்திய பாடநூல்களில் அமரத்துவமாக இடம் பெற்றன. ஆனால் இந்த நூற்றாண்டில் வந்த விஞ்ஞானி ஐன்ஸ்டீனின் (Einstein) கொள்கை கேந்திர கணித அமைப்பு இயற்கையின் உள்ளார்ந்த தன்மை (inherent nature) என்னும் முன்னைய விஞ்ஞானிகள், தத்துவஞானிகளின் நம்பிக்கையைத் தகர்த்து விட்டது. இதுவரை நம்பப்பட்ட இயற்கைத் தோற்றத்தை உருவகப்படுத்திய கேந்திர கணித அமைப்பு உண்மையில் மனம் அல்லது எண்ணத்தினால் உருவாக்கப்பட்டதே என்று அவரின் சார்பியல் கொள்கை (Theory of relativity) எடுத்துக் காட்டியது.

பைதகரசும் மற்றைய கிரேக்க அறிஞரும் கண்ட கணிதவியல் சார்ந்த தத்துவக் கொள்கைகள் ஐன்ஸ்டீன் காலம் வரை மேற்கத்திய உலகில் அமரத்துவமாகக் கருதப் பட்டாலும், ஆன்மீகம் சார்ந்த கீழைத் தேச தத்துவ ஞானிகளால் ஏற்றுக் கொள்ளப்படவில்லையெனலாம். இவர்கள் கருத்துப்படி கணிதமும் மூலப்பிரகிருதி அல்லது மாயையின் ஒரு கூறான எண்ணத்தின் அல்லது மனத்தின் வெளிப்பாடேயாகும். ஐன்ஸ்டீனின் உலகம் போற்றும் சார்பியல் கொள்கையும் இதனை ஏற்பதாக அமைந்துள்ளது. எல்லாமே மனத்தின் தோற்றங்கள். மனத்தினால் உண்மைத் தோற்றத்தைக் காணமுடியாது என்ற புத்தர் சங்கரர் தத்துவங்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ள முடியாதவை. ஆயினும் எண்ணத்தின் முக்கியத்துவம் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுவது.

**எண்ணமும் கலையும்**

மனித முயற்சிகள் அனைத்திற்கும் எண்ணமே பிறப்பிடம். வாழ்வியற் கூறுகள் அனைத்தின் உயர்விற்கும் உயர்ந்த எண்ணம் வித்தாக அமைகிறது. அறத்தோடிசைந்த வாழ்வை வலியுறுத்துபவர் வள்ளுவர். "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்" என்று அறத்துக்கு இலக்கணம் கூறுகிறார். மனத்துக்கண் மாசில்லாதவனின் எண்ணமும் மாசில்லாததாகவே இருக்கும். இந்த எண்ணத்தின் வெளிப்பாடே வள்ளுவர் சொல்லினிமை, சொல்வன்மை, வினைத்தூய்மை, சான்றாண்மை முதலிய அனைத்து அறங்களுமாகும்.

எழுத்து எண்ணத்தை வெளிப்படுத்தும் கருவி. அது வரிவடிவமாகவும் இருக்கலாம்; செயல் அல்லது கலை வடிவமாகவும் இருக்கலாம். அறஞ்சார்ந்த எண்ணமும், அதனை வெளிப்படுத்தும் எழுத்தாகிய கலைகளும் வாழுகின்ற சமுதாயத்திற்குக் கண்ணாகுமென்பது வள்ளுவர் கருத்தென்றால் அது எக்காலத்துக்கும் எவ்விடத்துக்கும் பொருந்துவதே. கல்வி என்ற அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களில் இரண்டாவது குறளில் மட்டும் தான் எண்ணும் எழுத்தும் வருகின்றன. கல்வியுடன் தொடர்புடைய 'கல்லாமை' கேள்வி', 'அறிவுடைமை' ஆகிய அதிகாரங்களிலும் இச்சொற்கள் கையாளப்படவில்லை. எண்ணும் எழுத்தும் என்ற சொற்றொடருக்கு எண்ணமும் அதன் வெளிப்பாடாகிய கலைகளும் என்று கருத்துக் கொண்டால் அது மற்றைய குறள்களுடன் ஒத்துப்போவதாக அமைகிறது. ஆனால் கணிதத்தையும் இலக்கியத்தையும் பொருளாகக் கொண்டால் அத்தகைய கருத்துக்கள் வேறு குறள்களில் வெளிப்படுவதாகத் தெரியவில்லை.

**எழுத்தின் ஆற்றலின்மை :**

கீழைத் தேச ஆன்மீக ஞானிகள் (Mystic Saints) தம் இறையனுபவத்தை வெளிப்படுத்த வழக்கிலுள்ள மொழி பல இடங்களில் ஆற்றலிழந்து விடுவதை உணர்ந்துள்ளனர். இதே நிலை இன்றைய விஞ்ஞானிகளிடையிலும், குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் அணுவியல் சார்ந்த பௌதிகத் துறையில் ஏற்படுவதுண்டு. இதனாலேயே பௌதிகவியலாரும் (Physicists) ஆன்மீக ஞானிகளும் தங்கள் உயர் அனுபவ அறிவை உலகிற்கு வெளியிட வரும்பொழுது அவர்களின் மொழிவழிக் கூற்றுக்கள் புதிர்கள் கொண்டனவாகவும் (Paradoxical) தர்க்க முரண்பாடுடையனவாகவும் (Logical contradications) சில வேளைகளில் இருப்பதுண்டு.

அணு பற்றிய பௌதிகவியலில் (atomic physics) ஒளி அல்லது அதன் பொது நிலையான மின்காந்தக் கதிர் வீச்சு (Electromagnetic radiation) ஒரு நிலையில் அலைகளின் தன்மை கொண்டதாக (Phenomenon of waves) இருக்கிறது. இன்னொரு நிலையில் அசையும் அணுப்பொருட்டன்மை கொண்டதாக இருக்கிறது. இந்த இரு வேறு நிலைகளும் சித்தாந்தம் கண்ட இறை தத்துவம்போல் 'ஒன்றாகி உடனாகி வேறாகி' இருக்கின்றன. இந்த உண்மை



நிலையை (reality) முழுமையாக வெளிப்படுத்த எண்ணுக்கும் (கணிதத்திற்கும்) ஆற்றலில்லை; எழுத்துக்கும் ஆற்றலில்லை. பொது மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. இத்தகைய நிலை, முன்பு கூறியபடி, ஆன்மீகத்துறையிலும் வருகிறது. ஆனால் அங்கே ஆன்மீகக் குறியீடுகள் (Mystic symbols) சங்கேத மொழிகளால் (Mystic languageo) இது உணர்த்தப்படுகிறது. அணுவியல் கண்ட இருவேறு நிலைகளையும்-அணுத் தன்மையையும் (ஆற்றலையும்) பொருட்டன்மையையும்-விளக்குவதாகக் சைவத்தமிழுலகம் கண்ட சிவநடன தத்துவம் அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது. இங்கே "அணுத்தரு தன்மையில் ஐயோன் காண்க" என்னும் மணிவாசகரின் திருவாக்கை எண்ணி எண்ணி வியப்பெய்த வேண்டியுள்ளது. ஆற்றலும் (energy) பொருளும் (Matter) அசைவும் (dynamic) அசைவின்மையும் (Static) ஆகிய இருவேறு நிலைகளையும் ஒரு சேர உணர்த்தும் இந்த இறைவடிவம் மனித எண்ணத்தின் வியத்தகு வெளிப்பாடே. இங்கே வள்ளுவர் கூறும் எண்ணுக்கும் எழுத்துக்கும் பொதுவாகக் கொண்ட கருத்து நிலையிழந்து போக, எண்ணமும் அதன் வெளிப்பாடும் என்ற கருத்தே நிலைத்து நிற்கிறது.

---

உருவகம் (Metaphor)

ஒரு பொருளை அதற்குரிய சொல்லால் உணர்த்தாமல், தெளிவுறுத்த விரும்பி உருவகப்படுத்தி அந்த உருவகச் சொல்லால் உணர்த்தல்;

'பழுத்த கிழவர்' என்பதில் பழுத்தல் என்பது அவ்வாறு பொருளுணர்த்தல் காண்க, பழுத்தல் பழத்தின் தன்மை யாதலின், இங்குக் கிழவர் பழம்போல் ஆனார் என்ற பொருள் பயக்கின்றது;

பந்தலின் கால், மலையின் அடி, நாற்காலியின் கை, மரத்தின் தலை, கட்டுரையின் தலைப்பு என்பவற்றிலும் சொற்கள் உருவகப் பொருள் உணர்த்துதல் காண்க;

மு. வ; மொழி நூல் : பக். 255

# வேற்றுமை-உணர்த்துமுறை

மருதூர் அரங்கராசன்

**வேற்றுமை :-**

ஒரு வாக்கியத்தின் பொருட்புலப்பாட்டில் வேற்றுமை வகிக்கும் பங்கு மகத்தானது. ஒவ்வொரு வாக்கியத்தையும் நுட்பமானதொரு தனி சிறு நாடகம் என்று கொண்டால், அவ்வாக்கியத்தின் பயனிலைதான் அந்நாடகத்தின் 'கரு' என்றும், அவ்வாக்கியத்திலுள்ள பெயர்ச்சொற்கள்தாம் வெவ்வேறு வேடம் புனைந்த 'நாடக மாந்தர்கள்' என்றும் கூறுவர் லாஞ்சென்டொயன் (Langendone) என்பார்.[1]

''சாலியன் ஆடையை நூலால் ஆசிரியர்க்காக வீட்டின்கண் நெய்தான்.'' என்னும் வாக்கியத்தை ஒரு தனி-சிறு நாடகம் (Play) என்று கொள்வோம். 'நெய்தான், என்பது இந்நாடகத்தின் 'கரு' (Plot) 'சாலியன், ஆடை' நூல், ஆசிரியர், வீடு'-என்பன இந்நாடகத்தில் நடிக்கும் மாந்தர்கள் (Actors). இவர்கள் முறையே, ஐ, ஆல் கு + ஆக, கண்-என்றும் 'ஒப்பனைகளைப் (Make-ups) புனைந்துள்ளனர் புனைந்தபின் முறையே எழுவாய், செயப்படுபொருள், கருவி, பொருட்டு, இடம்,-என்னும் 'பாத்திரங்களாச' த்(Characters) தோன்றி நடிக்கிறார்கள். புனைவும், நடிப்பும் இல்லாமல் நாடகக்கரு விளங்காது. வேற்றுமை இல்லாமல் மொழி இயங்காது; பொருள் புலப்படாது.

**உணர்த்து முறை:-**

'ஒரு வாக்கியத்திலுள்ள பெயர்கட்கு வினையோடுள்ள பொருள் தொடர்பை இலக்கண உறவைக் காட்டுவதே வேற்றுமை' என்று பொதுப்பட வரையறை செய்யலாம். இந்த வேற்றுமையை உணர்த்த உலகமொழிகளில் பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன. அவை வருமாறு:-

1. வேற்றுமை உருபுகளால் உணர்த்தல் (Casal Suffix)
2. சொல்லுருபுகளால் உணர்த்தல் (Post-Positions)
3. முன்னுருபுகளால் உணர்த்தல் (Prepositions)



4. சொல் வைப்பு முறையால் உணர்த்தல் (Word Order)
5. குரல் ஏற்றத்தாழ்வால் உணர்த்தல் (Case by tone)

**வேற்றுமை உருபுகளால் உணர்த்தல் :-**

வேற்றுமைப் பொருளை உணர்த்த, வேற்றுமை உருபினைப் பெயரோடு இணைக்கும் வழக்கம் தமிழின்கண் மிகுதியாக உள்ளது. ஒவ்வொரு வேற்றுமைக்கும் ஒவ்வோர் உருபு மட்டுமே உள்ளதாகச் சொல்லமுடியாது. மூன்றாம் வேற்றுமைக்கு 'ஒடு' உருபைக் குறிக்கும் தொல்காப்பியரே 'ஆன்' உருபையும் கருதியிருக்கிறார் என்றறிய முடிகிறது (தொல். 59?) அ, ஆன, க-என்பவற்றை முறையே இரண்டு, மூன்று, நான்காம் வேற்றுமைகளின்கண் செய்யுளில் மட்டுமே வழங்கும் மாற்றுருபுகளாக அவர் குறித்துள்ளார் (தொல். 592). நான்காம் வேற்றுமைக்கேயன்றி, உயர் திணைக்கண் வரும் ஆறாம் வேற்றுமைக்கும் 'கு' உருபை வழங்கியிருக்கிறார் தொல்காப்பியர் (தொல். 578). ஏழாம் வேற்றுமையின்கண் 'கண்' என்னும் உருபையேயன்றி, வேறு சிலவற்றையும் உருபுகளாகவோ, சொல்லுருபுகளாகவோ அவர் குறித்துள்ளார் (தொல். ?66). வேற்றுமை உருபுகளாக இலக்கணப் புலவர்களால் குறிக்கப்பட்டவற்றுள் 'ஐ' 'கு' என்பனவே ஓரெழுத்து உருபுகளாம்.

மொழி வளர்ச்சியினாலும், பெயரோடு இணைந்து நின்று வேற்றுமை உருபுகளைப் பிரிக்கும்போது நேர்ந்த பிறழ் பிரிப்புகளினாலும், லகர-ளகரப் போலிகளினாலும் தொல்காப்பியத்திற்குப் பின்னும் காலவோட்டத்தில் மேலும் சில உருபுகள் தமிழ் வேற்றுமையிலக்கணத்தில் சேர்ந்தன; இன்றளவும், இரண்டாம் வேற்றுமையொன்றே 'ஐ' என்னும் ஒன்றை மட்டுமே வேற்றுமை உருபாகக் கொண்டுள்ளது; அவ்வேற்றுமைக்கு வேறு உருபுகளோ, சொல்லுருபுகளோ எந்த இலக்கண நூலாலும் சுட்டப்பெறவில்லை. ஆயின், செய்யுளில் மட்டும் வழங்கும் மாற்றுருபாக 'அ' என்பதை தொல்காப்பியர் அவ் வேற்றுமைக்குச் சுட்டுகிறார் (தொல். 592).

வேற்றுமை உருபுகள் பெயரின் இறுதியில் சாரியை பெற்றோ, பெறாமலோ நிலைபெறும். திணை, பால், உயிர் போன்றவற்றிற்குத் தக வேற்றுமை உருபுகள் மாறுகின்ற

நிலைமையைப் பல்வேறு உலக மொழிகளில் காணலாம்; இந்நிலை பெரும்பாலும் தமிழில் இல்லை.

எந்தச் சூழலிலும் ஒரு வேற்றுமை உருபு இன்னொரு வேற்றுமை உருபை ஏற்பதில்லை என்பதைத் தமிழ் வேற்றுமை இலக்கணக் கோட்பாட்டின் ஒரு கூறாகவே கூறலாம். இது வண்ணனை ஆய்வு அடிப்படையில் எடுக்கப் பட்ட ஒரு முடிவாகும். இனி வரலாற்று ஆய்வு அடிப் படையில் ஈருருபுகள் இணைந்து ஓர் உருபாய் நிலை பெறுதலைத் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் குறிப்பர்.[2]

**சொல்லுருபுகளால் உணர்த்தல் :-** சில வேளைகளில் வேற்றுமை உருபின் பணியை ஒரு தனிச்சொல் நின்று செய்வதையும் காணமுடியும். அப்பொழுது அச் சொல்லைச் 'சொல்லுருபு' என்று வழங்குவர். 'சொல்லாக நின்று உருபாகப் பணியாற்றும் ஒன்று' என்று சொல்லுருபைப் பொருள் விளங்கிக் கொள்ளலாம்.

**கண்ணன் கத்தியால் வெட்டினான்;**

இங்கு 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு தனக்குரிய கருவிப்பொருளை உணர்த்தி நின்றது;

**கண்ணன் கத்திகொண்டு வெட்டினான்.**

இங்குக் 'கொண்டு' என்னும் வினையெச்சச் சொல், மூன்றாம் வேற்றுமை உருபு 'ஆல்' உணர்த்திய அதே பொருளை உணர்த்திற்று. இவ்வாறு, ஒரு வேற்றுமை உருபு நிற்க வேண்டிய இடத்தில், அந்த வேற்றுமை உருபிற்குப் பதிலாக, ஒரு சொல் நின்று, அவ்வேற்றுமை உருபின் பொருளைத் தரும்போது, பணியைச் செய்யும்போது, அச் சொல்லைச் 'சொல்லுருபு' என்று வழங்குகின்றோம்.

இந்நிலையை உவம உருபுகளிடத்தும் காண முடிகிறது; தண்டியாசிரியர் 'போல, ஒப்ப' என்னும் உவம உருபுகளைச் 'சார்த்தி' என்றும், உவமப் பொருளில் வரும் பிற சொற்களாய 'அன்ன, ஆங்க, மான' போல்வனவற்றை 'ஆர்த்தி' என்றும் வழங்குவர்;

சொல்லுருபுகளைத் தொல்காப்பியரே குறித்திருப்ப தாகச் சேனாவரையர் கருதுகிறார்.[3] ஏழாம் வேற்றுமை பற்றிய இரண்டாவது நூற்பாவில் (தொல். 566) தொல்



காப்பியர் குறித்திருப்பவை உருபுகளா, சொல்லுருபுகளா என்பது பற்றிய விவாதம் இன்றைய ஆய்வாளர்களிடமும் நிகழ்ந்து வருகின்றது. சொல்லுருபுகளைப் 'பொருட்டு' என்றும், 'பொருள்' என்றும், சேனாவரையர் குறிப்பர். அத்தம், விபக்தி அர்த்தம், வேற்றுமைமைப் பொருள் என்று பலவாறாய்ப் பிரயோக விவேகமுடையாரும், 'சொல்லுருபு' என்று இலக்கணக் கொத்துடையாரும் கூறுவர்.

**முன்னுருபுகளால் உணர்த்தல் :-**

ஆங்கிலம் போன்ற மொழிகளில் இம்முன்னுருபுகளின் ஆட்சியை மிகுதியும் காண முடியும். தமிழில் 'கத்தியால்' (கத்தி+ஆல்) என்று பெயர்க்குப் பின் 'ஆல்' என்னும் வேற்றுமை உருபு கொடுத்துக் கூறுவதை, ஆங்கிலத்தில் 'with knife' என்ற பெயருக்கு முன் 'with' என்னும் 'முன்னுருபு' (Preposition) கொடுத்துக்கூறுவார். with: By, to, into, upto, for, from, away from, off, of, out of, at, in, on-போன்வன ஆங்கிலத்தில் முன்னுருபுகளாய் வழங்கும்;

பிரெஞ்சு மொழியிலும் இம்முன்னுருபு முறையைக் காணலாம். 'Avec Le Main' என்ற ஃபிரெஞ்சு மொழித் தொடர்க்குக் 'கையால்' என்பது பொருளாகும். இங்கு 'Avec' என்னும் முன்னுருபே வேற்றுமைப் பொருளைச் சுட்டிற்று. இந்த 'Avec' என்பதோடு 'de, pour, dens' போல்வனவும் வேற்றுமைப் பொருடரும் முன்னுருபுகளாக அம் மொழியில் வழங்கும்.

**சொல் வைப்பு முறையால் உணர்த்தல் :-**

சில மொழிகளில் சொற்கள் ஒட்டுகள் எவற்றையும் ஏற்பதில்லை. அத்தகைய மொழிகளைத் 'தனிநிலை மொழிகள்' (Isolating languages) என்று வழங்குவர். இவ்வகை மொழிகள் வாக்கியத்தில் சொற்கள் நிற்கும் இடத்திற்குத் தகப் பொருள்களைத் தரும். சீனமொழியின் கண் இவ்வியல்பை முழுக்க முழுக்கக் காணலாம். இம் மொழியின் பெயர்ச்சொற்கள் அனைத்தும் ஒட்டில்லாமலேயே வழங்கும் இயல்பின. வாக்கியத்தில் நின்ற இடத்தின் ஆற்றலால்தான் அவை பொருள் தரும்.

ஆஃபிரிக்க மொழிகள் பலவற்றிலும் கூட இச்சொல் வைப்பு முறையே வேற்றுமைப் பொருளை வெளிப்படுத்தக்

காண்கிறோம்; காட்டாக, 'எவெ' மொழியைச் சுட்டலாம். இம்மொழியின் கீழ்க்காணும் வாக்கியத்தைப் பார்க்கலாம்.

| | | |
|---|---|---|
| வாக்கியம் | — | e kpo fia |
| சொல் வைப்பு முறை | — | அவன் கண்டான் அரசன். |
| பொருள் | — | அவன் அரசனைக்கண்டான். |

இவ்வைப்பு முறையில் மாற்றம் செய்வதால் பொருளும் மாறிவிடும்.[4]

ஆங்கிலத்தில் இடப்பெயர்களில் மட்டுமே வேற்றுமையைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் காணமுடியும் (I & Me; He & Him etc.) மற்றைய சூழல்களில் சொல் வைப்பு முறையும் முன்னுருபுகளுமே வேற்றுமைப் பொருள் வெளிப்பாட்டில் பெரும் பங்கு வகிக்கின்றன. குறிப்பாக, செயப்படுபொருள் வேற்றுமையில் சொல்வைப்பு முறையின் செல்வாக்கைத் தெளிவாகக் காண முடியும்.

Murugan Saw Valli
Valli Saw Murugan.

சொல் வைப்புமுறையில் செய்யப்படும் மாற்றம் எழுவாயைச் செயப்படு பொருளாகவும், செயப்படுபொருளை எழுவாயாகவும் மாற்றிவிடக் காண்கிறோம்.

**குரல் ஏற்றத்தாழ்வால் உணர்த்தல் :-**

குரல் ஏற்றத்தாழ்வாலும் வேற்றுமையை உணர்த்தும் மொழிகள் உள்ளதென அறிகிறோம். கிழக்கு ஆப்பிரிக்காவில் வழங்கும் 'மசய்' (MASAI) மொழியில் குரல் ஏற்றத்தாழ்வால் வேற்றுமைகள் உணர்த்தப்படுகிற ஓர் அரிய நிலையைக் காண்கிறோம்.[5]

**அறிவன :-**

1. வேற்றுமையை உணர்த்த உலக மொழிகளிடையே பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன.
2. வேற்றுமை உருபுகளும் சொல்லுருபுகளும் தமிழின்கண் வேற்றுமை உணர்த்துகின்றன.



3. கிழக்கு ஆப்பிரிக்காவில் வழங்கும் 'மசய்' (MASAI) மொழியில் குரல் ஏற்றத்தாழ்வால் வேற்றுமையை உணர்த்தும் அரிய நிலையைக் காண்கிறோம்.

**குறிப்புகள் :-**

1. Quotation, George, A. Miller, Philip N. Johnson-Laird, Language and perception, Cambridge University press, Cambridge, 1976, P. 316.
2. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், 'தமிழ்மொழி வரலாறு' ச. செயப்பிரகாசம் (மொ-ர்) சர்வோதய இலக்கியப்பண்ணை, மதுரை, 1982, ப. 138-140.
3. சேனாவரையர் (உ-ர்) தொல்காப்பியம் சொல்லதிகாரம் கழகம், சென்னை, 1974, நூ. 550 இன் உரை, ப. 164-163.
4. ச. அகத்தியலிங்கம், உலகமொழிகள் நான்காம் பகுதி-ஆப்பிரிக்க மொழிகள், பாரி நிலையம், சென்னை, 1974, ப. 19.
5. H. A. Gleason, An Instroduction to Descriptive Linguistics, Oxford & IBH Publishing Co., New Delhi, 1970, P. 159.

———

**சொல்லின் திரிபு சோம்பல் பற்றிய விளக்கம்**

சோம்பலின் விளைவு தீமையே; சோம்பலால் இழத்தல் நேருமேயன்றி ஈட்டல் நேராது. ஆயின், சொற்களைக் குறுக்கி வழங்குவதால், பேசும் மக்களுக்கு யாதொரு தீமையும் விளைவதில்லை; இழத்தல் ஒன்றும் இல்லை. பேசும் முயற்சி குறைந்து காலமும் சுருங்குவதால் நன்மையே விளைகின்றது எனலாம். சொற்களின் வடிவம் இழப்பு அன்றோ என வினவலாம். இழப்பு மிகுதியாயின் சோம்பல் என்று கூறுவது பொருந்தும். ஈட்டல் மிகுதியாயின் அதனைச் சிக்கனம் என்று கூறல் வேண்டுமன்றோ?

மொழிநூல் டாக்டர் மு. வ. பக். 92

## சண்முகனார் புகழ் வாழ்க !

(பேராசிரியர் K. S. சிவராமலிங்கம், எம்.ஏ.
தமிழ்த்துறைத் தலைவர், எஸ். ஐ. வி. இ. டி. கல்லூரி,
கௌரிவாக்கம், சென்னை-601302.)

சாலப் பெரியவராம் சர் ஆர்கே சண்முகனார்
கோல நூற்றாண்டு கொண்டாடும்—ஞாலம்
தவப்பயன் பெற்றுத் தழைத்தினி தோங்க
நவசக்தி நாயகன் காப்பு

கோவைதந்த கோமகனார் குலதிலகம் ஆர்.கே.எஸ்
குவித்தபுகழ்க் கெல்லையுண்டோ கூறும்
கூறுகையில் அவர் புகழ்தான் ஏறும்.
சேவையொன்றே சீலமெனச் செம்மாந்து வாழ்ந்திருந்த
சிந்தைதகவர் சண்முகனார் தொண்டு
செகமறிந்து வியப்பான துண்டு. (கோவை)

நாநலமாம் நலனுடைமை நல்லவகை பெற்றிருந்த
நாயகர்தாம் கொண்டிருந்த பணிகள்
நாட்டினுக்கே அவரளித்த அணிகள்
பாநலத்தைச் செம்பாலும் பண்ணாய்வுத் தமிழாலும்
பரிந்தளித்த கருத்துரைகள் கேட்டு
பாருலகே பாமாலை சூட்டும் (கோவை)

படிப்படியாய் முன்னேறிப் பாரதத்தின் நிதியமைச்சாய்ப்
பரிமளித்த பொருளியலில் வல்லார்
பண்பறிந்து போற்றுவரே நல்லார்
துடிப்பான தூதுவராய்த் தொடர்ந்துபல நாடுகளில்
தொகுத்த பயன் வரலாறு சொல்லும்
சூரியனை அவர்பெருமை வெல்லும் (கோவை)

தன்மானத் தமிழரெனத் தரணியெலாம் பாராட்டும்
சண்முகனார் புகழ் என்றும் வாழ்க
தகைமை யுறும் வாழ்வியலே சூழ்க
மன்னரெனப் பொதுவாழ்வில் மாண்புடனே திகழ்ந்திருந்த
வாணியர்தம் மாமணியைப் போற்றி
மனதார வாழ்த்துகிறோம் சாற்றி (கோவை)



ஆர்.கே. சண்முகனார் புகழ் பாடுவோம்
அரிய நூற்றாண்டு நிறைவுநாள் விழாவில் (ஆர். கே.)
யார்க்கும் எதற்கும் அஞ்சா அரும்பொருளியல் மேதை
அரிய புகழ்கொண்ட அற்புதக் குணசீலர் (ஆர். கே.)

கோவை நகரீந்த கோமகனார்—எழில்
கொஞ்சும் தமிழிசைக் காவலனார்
பூவினைப் போல்உள்ளம் பூண்டவராம்—சொற்
பொழிவினால் இவ்வுலகை ஆண்டவராம் (ஆர். கே.)

சுதந்திர பாரதத் திருநாட்டின்—புகழ்
சூடிய முதல்நிதி யமைச்சரவர்
இதந்தரும் நன்னெறி எடுத்தோதி—சுகம்
ஈந்திடும் பல்கலை வாணரவர் (ஆர். கே.)

வெள்ளையன் வியந்திடும் ஆங்கிலத்தும்—நம்
வியன்தமிழ் மொழியிலும் வல்லரவர்
கள்ளமே யறியாக் காந்திமகான்—உளம்
கவர்ந்திடும் கண்ணியம் கொண்டிருந்த (ஆர். கே.)

அந்தநாள் இந்திய அரசியலில்—அவர்
ஆற்றிய தொண்டுகள் மிகப் பலவாம்
மூத்திடும் டில்லி சட்டசபை—மகிழ்
மோகனத் தலைவராய் வீற்றிருந்த (ஆர். கே.)

கொச்சியின் திவானாய் இவரிருந்து—நல்
குடியர சன்றே இவரளித்தார்.
மெச்சும் அண்ணா மலைஅரசரவர்—விழை
மேன்மைத் தோழமை பூண்டிருந்தார். (ஆர். கே.)

"அண்ணா மலை"யின் துணைவேந்தாய்—நலம்
யாவும் பெருகிட வழிகண்டார்
கண்ணாய் வாணியர் குலங்காத்த—திறன்
கடமை தவறாப் பெருந்தலைவர். (ஆர். கே.)

செந்தமிழ்ச் செல்வி

## "செந்தமிழ்ச் செல்வி"

| ஆண்டுக் கையொப்பம் | | வாழ்நாள் கையொப்பம் | |
|---|---|---|---|
| உள்நாடு | ரூ. 25.00 | உள்நாடு | ரூ. 250-00 |
| வெளிநாடு | ரூ. 125-00 | வெளிநாடு | ரூ. 750-00 |

## மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

| | |
|---|---|
| உயர்திரு இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்) | 10 00 |
| திரு. வி. குமாரசாமி அவர்கள், ரியூனியன் தீவு. | 10 00 |
| திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர், ஓய்வு) | 5 00 |
| திரு. முருக விசாகநம்பி அவர்கள் | 5 00 |
| திரு. A. T. A. ஈஸ்வர அடிகளார் | 5 00 |
| தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் | 5 00 |
| ஆரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள் | 5 00 |
| கல்லை, தே. கண்ணன் அவர்கள் [ஆசிரியர் 'வள்ளுவர் வழி'] | 5 00 |
| பெருரு. தமிழ்வேந்தன், பவானிசாகர் | 5'00 |
| திரு. K. வேணுகோபால், சென்னை-14 | 25 00 |
| திரு. பழனி ஆறுமுகம் அவர்கள், சேக்கிழார் பதிப்பகம், சிள்ளான் மலேசியா. | 15 00 |
| திரு. த. ஆறுமுகம் அவர்கள், 51 வெங்கடராமய்யர் தெரு, சென்னை-79. | 5 00 |
| புலவர் கோ. சம்பத்து, இலவம்மட்டி-635 602 வ. ஆ. மாவட்டம், (அமரர் கோவிந்தராஜன் முதலாண்டு நினைவுக்காக) (8-10-92) | 10.00 |
| முதல்வர், இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி-623 001. (2.9.92 அன்று நடந்த திருமகள் அன்பரசியின் திருமணத்தின் பொருட்டு) | 12 00 |

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்துக்காக 80, பிரகாசம் சாலை, சென்னை-108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது; ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி எம்.ஏ., பி.லிட்.

தமிழ்நாடு ... 171733 சென்னை-600

## கழகப் புதிய வெளியீடுகள்

### அரசியல் மேதை அம்பேத்கார்

திரு. மோ. பாலசுப்பிரமணியம், எம்.ஏ., பி.லிட்., 16 00

மகாராட்டிரத்தின் ஒரு மூலையில் சிற்றூர் ஒன்றில் பிறந்து இன்று குவலயம் முழுவதும் "அரசியல் மேதை" என்ற புகழ் ஒளி வீசும்—ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளிவிளக்காகத் திகழும் பாபா சாகேப் டாக்டர் அம்பேத்காரின் வரலாற்றை இன்பச் சுவை சொட்டும் வகையில் திகழ்வது இந் நூல்.

### பேரகத்தியமும் புதிய ஐந்திரமும்

புலவர் இரா. இளங்குமரன் 14 00

கடல்கோளால் அழிந்துபோன நூல்களுள் ஐந்திரமும் ஒன்றென்பர் ஆனால் ஐந்திரம் என்ற பெயருடன் அண்மையில் ஒரு நூல் வெளிவந்து ஐயப்பாட்டின் மொத்த உருவமாகத் திகழ்கிறது. இதை உரசிப் பார்த்து, ஒப்புநோக்கி ஆராய முற்பட்டு எழுதப் பட்டதே இச் சிறுநூல். நூலாசிரியரின் நடை தமிழ் மக்களால் ஏற்கெனவே மிகப் போற்றப்பெறுவது நாடறிந்த செய்தியாகும்.

### தமிழர் தோற்றமும் பரவலும்

புலவர் கா. கோவிந்தன் 20 00

பாவாணர் அவர்களால் மிகவும் போற்றிப் புகழப்பட்ட பேராசிரியர் வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந் நூலின் பெருமை யுணர்ந்து முன்னாள் சட்டமன்றத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்களைக் கொண்டு அழகிய தமிழில் கழகம் மொழிபெயர்க்கச் செய்து வெளியிட் டுள்ள சிறந்த பயனுள்ள—அனைவரும் படிக்க வேண்டிய நூல்.

### உன்னை நீ உயர்த்த வேண்டுமா?

புலவர் இரா. இளங்குமரன் 10 00

சமுதாயம் முன்னேறத் தனிமனிதன் முன்னேற வேண்டும். அதற்குச் சரியான நெறிமுறைகளைக் கூறுவதில் திருக்குறளுக்கு நிகர் வேறு இல்லை. அதனால் திருக்குறளில் இருந்து நல்ல நெறிமுறை களைக் கூறி நாம் வாழ்க்கையில் உயர்நிலை எய்த வழிகாட்டுகின்றார் ஆசிரியர்.

பதிவு எண் : M / 4899 OCT. 1992

# Asian Educational Services

(C-2-15, SDA. New Delhi-110016.)

Branch : No. 5. Sripuram [redacted] Street,
Royapettah, Madras-600 014.

Phone No. 865040

| | | | |
|---|---|---|---|
| A Comprehensive Tamil and English Dictionary —WINSLOW M. | | 165 | 00 |
| English Tamil Dictionary —WINSLOW | | 165 | 00 |
| Abithana Chinthamani-Encyclopaedia of Tamil Literature —SINGARAVELLU MUDALIAR | | 165 | 00 |
| Thirukkural Original Tamil with English Translation —DREW & LAZARUS | GB | 50 | 00 |
| | HB | 35 | 00 |
| | PB | 20 | 00 |
| Tamil Moli Akarathi (Tamil-Tamil Dictionary) Coming Shortly —KATHIRAIVER PILLAI | | 165 | 00 |
| A Grammar of the Common Dialect of the Tamil language —JOSEPH BESCHI | | 145 | 00 |
| Dictionary of Tamil Proverbs —LAZARUS JOHN | | 195 | 00 |

Books can be had of :

**The South India Saiva Siddhantha Works. Publishing Society. Tinnevelly, Ltd.,**

154, T. T. K Road, Madras-18.

Branches :

79, Prakasam Saalai (Broadway), Madras-108.
Tirunelvelli-6. Madurai-1. Coimbatore-1.
Kumbakonam-1. Trichirappalli-2. Salem-1.

அப்பர் அச்சகம், சென்னை-108.